பொங்கிவரும் புதுவெள்ளம்

கலைஞர் மு.கருணாநிதி



திமுகழகம்

பொங்கி வரும் புது வெள்ளம்

அண்ணா அறிவாலயத்தில்
இயங்கும் பேராசிரியர் ஆய்வக
நூல் நிலையத்திற்கு இந்த நூல்
V. ஜெயபிரகாஷ் அவர்களால்
அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

மு. கருணாநிதி





திருமகள் நிலையம்
55. வெங்கட்நாராயண ரோடு
தி. நகர், சென்னை-600017.

முதற்பதிப்பு : செப்டம்பர், 1988

இரண்டாம் பதிப்பு : மார்ச் 1990

உரிமை : ஆசிரியருக்கு

22060

க 894.8115
பொங்கி

விலை : ரூ. 8-25

அச்சிட்டோர் :

முகில் பிரிண்டர்ஸ்,
சென்னை-86.

தலைவர் சுஸீந்திரனின் "தாலாட்டு தேன் நிலா"
ஆடியோ வெளியீட்டு விழாவில் (8.6.88)
ஆற்றியுரை.

ⓧ பொங்கிவரும் புதுவெள்ளம்

ⓧ நாடிநூற்ற ஒரு விழா

சென்னை மதுக்கலைநாடியில் (கி.உ. இசை அன்று)
நடைபெற்ற விழாவில் ஆற்றிய உரை.

ⓧ மதுவென்னாடம்

சென்னை வாணிகர்
கலைநயம் பயிலகத்தில் 21.3.88 அன்று
ஆற்றிய உரை

ⓧ ஒரு நாயகனும் இரு மனைவியரும்:

ⓧ தேனிலவு என்றால் என்ன? சென்னை

எஸ். ஐ. வி. ஸ். டி. கலைநுட்பியில்
30.3.88 அன்று ஆற்றிய உரை

பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணாமலை அறிவு

பொங்கிவரும் புதுவெள்ளம்

சிந்தனையாளர் பேரவையின் சார்பில் காலை முதல் இது வரையில் நடைபெறுகின்ற இந்த நிகழ்ச்சி தமிழின் முன்னேற்றத்திற்காக நாமனைவரும் அக்கறை காட்ட வேண்டும். ஆர்வம் கொள்ள வேண்டும் என ஊக்கப்படுத்து கின்ற நிகழ்ச்சியாக அமைந்துள்ளது. தமிழ் வளர்ச்சிக்காக இங்கே கூடியிருக்கிறோம் என்று சொல்வது பொருத்தமென் றாலும், தமிழின் முன்னேற்றத்திற்காகக் கூடியிருக்கிறோம் என்று கூறுவது அதைவிடப் பொருத்தமானதாக இருக்கும். முதலில் இந்த விழாவில் வாழ்த்துரைகளைப் பெற்ற மணவை முஸ்தபா அவர்களும், வாழ்த்திய தம்பி வலம்புரி ஜான் அவர் களும், என்னைப் பெரிதும் பாராட்டி, புகழ்ந்து உற்சாகப் படுத்தியிருக்கின்றார்கள். குறிப்பாக வரவேற்புக் கவிதையை தம்பி கபிலன் இங்கே படித்தார். சில நேரங்களில் கவிதைகள் கற்பனைக் கடிவாளத்தை மீறிப்போய்விடுகின்ற காரணத்தால் புகழ வேண்டும் என்ற ஆசையின் காரணமாக அதிகமாகவே கூட புகழ்ந்து விடுகிறார்கள். தம்பி வலம்புரி ஜானைப் பற்றிக் கபிலன் இங்கே குறிப்பிடும் போது "உன்னுடைய கை, வளையல் அணியாமல் வீரமாக எழுதுகின்ற கை" என்று குறிப்பிட்டார். அது வலம்புரிஜானுடைய ஆண்மையை வீரத்தைக் குறிப்பிடுகிறதென்றாலும், தாய்மார்களை எவ் வளவு புண்படுத்தியிருக்கும் என்பதை நான் அறியாமல் இல்லை. ஏதோ வளையல் அணிந்தவர்களுக்கு வீரம் இல்லா ததைப் போலவும், நம்முடைய சங்க காலத்திலேயே காக்கை பாடினியார், நச்செள்ளையார், வெண்ணிக்குயத்தியார், அவ் வையார் போன்றவர்கள் எத்தகைய வீரப் பாடல்களையெல் லாம் எழுதியிருக்கின்றார்கள் என்பதைக்கூட இப்படிப் புகழ் கின்ற நேரத்தில் மறந்து விடுகிறோம். நான் தம்பி கபில

னுக்கு நடத்துகின்ற திறனாய்வு அல்ல இது. விமர்சனமும் அல்ல. விழா என்ற காரணத்தால் வேடிக்கையாகவும் பேசலாம் என்பதற்காக இதனைச் சொல்கிறேன்.

கபிலன் என்னைப் புதுக் கவிதையால் பாராட்டுகின்ற நேரத்தில் 'நான் முன்பே பிறந்திருந்தால் கம்பனுக்கும். இளங்கோவுக்கும்வேலைஇருந்திருக்காது' என்று சொன்னார். கம்பனும், இளங்கோவும் பிறக்க வேண்டும் என்பதற்காகத் தான் நான் அப்போதே பிறக்கவில்லை. [பலத்த கைதட்டல்-சிரிப்பு) ஏனென்றால் என்னைவிடப் பெரியவர்கள், ஆற்றலாளர்கள் பிறக்கவேண்டும் அல்லவா? அவர்கள் பிறந்தால் தானே, அவர்கள் தமிழை நான் கற்றுக்கொள்ள முடியும். [கை தட்டல்] ஆகவே உயர்த்திப் பேசுகின்ற நேரத்தில் ஒரு எல்லை இருக்கவேண்டும். என்னைத்தான் புகழ்ந்தார்கள். நான் வேறு ஆளாக இருந்திருந்தால், 'என்ன கம்பனோடு விட்டு விட்டீர்கள், ஷேக்ஸ்பியரையும் சேர்த்துச் சொல்ல வேண்டாமா? என்று சொல்லியிருப்பேன். நான் பயின்ற பள்ளி அண்ணாவின் பள்ளிஎன்பதால் அடக்கத்தோடு சொல்கிறேன். எனவே புகழுரைகள் அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சாகும் என்பதை மனதிலே வைத்து புகழ வேண்டும் என்ற என்னுடைய வேண்டுகோளை - இதுவும் ஒரு வகையிலே தமிழுக்காக நாம் ஆற்றுகின்ற தொண்டுதான். தமிழின் முன்னேற்றத்திற்காக நாம் ஆற்றுகின்ற பணிதான் என்று நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

இந்த இனிய விழாவில் சிந்தனைப் பேரவையின் சார்பில் தம்பி வலம்புரி ஜான் அவர்களின் அரிய முயற்சியாலும், அவர் மணவை முஸ்தபாவின்பால் கொண்டிருக்கின்ற ஆழ்ந்த அன்பின் அடிப்படையிலும் "அறிவியல் தமிழ்ச் சிற்பி" என்கின்ற பட்டயத்தை என் வாயிலாக வழங்கியுள்ளார்கள். பொன்னாடை ஒன்றும் இங்கே மணவை முஸ்தபா அவர்களுக்கு அணிவிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தப் பட்டயம் தரப்படுகின்றவரையில் இப்படி ஒரு நிகழ்ச்சி இருப்பது எனக்குத் தெரியாது. முன்பே அறிவித்திருந்தால் இந்தப் பட்டயத்தைக்கூட தம்பி வலம்புரி ஜானோடு கலந்துபேசி அதை ஒரு வெள்ளிப் பேழையிலே வைத்துத் தந்திருக்க முடியும். ஆனால் பேழையிலே வைத்துத் தந்தாலும்- இந்தப் பேரவையிலே ஒரு தாளிலே எழுதித் தந்தாலும்—தமிழர்கள் உள்ளங்களிலேயிருந்து தரப்படுகின்ற பட்டயம் அது என்ற காரணத்தால், அது போய்ச் சேருகின்ற இடம், பெருமைக்குரிய இடம் என்ற காரணத்தால், பட்டயத்திற்குப் பெருமை இருக்கிறதோ இல்லையோ—பட்டயத்தைப் பெறுகின்றவருக்கு உள்ள பெருமையின் காரணமாக பட்டயம் பெருமை பெறுகிறது.

பட்டயத்தை வழங்கும்போது அந்தப் படத்தைப் பார்த்தேன். ''அறிவியல் தமிழ்ச் சிற்பி'' என்று அதிலே எழுதப்பட்டுள்ளது. ஏன் ''அறிவியல் தமிழ் ஓவியர்'' என்று எழுதியிருக்கக் கூடாது என்று நான் சிந்தித்தேன். ஏன் எழுதியிருக்கக் கூடாது என்று எண்ணிப் பார்த்தேன். அறிவியல் தமிழ் ஓவியர் என்றால் ஏற்கனவே இருக்கின்ற ஒரு இடத்தில் தூரிகை கொண்டு ஒரு புதிய ஓவியத்தைத் தீட்டுகின்றவர். இயற்கைக் காட்சியை-எழில் மிகு தோட்டத்தை-அருவியின் அழகை-கிளியின் வண்ணத்தை-இவைகளைத் தீட்டிக் காட்டுகின்றவர் ஓவியர். சிற்பி என்று ஏன் இந்தப் பேரவையின் சார்பிலே அழைத்திருக்கிறார்கள் தெரியுமா?

அவருடைய தொண்டு இன்றைக்குத் தமிழ் எழுத்தை, தமிழ் மொழியைச் சீர்மைப் படுத்துவது; வெகு அழகாகச் அந்த நூலிலே அவருடைய முன்னுரையிலே 13ஆம் பக்கத்திலே குறிப்பிடுகிறார்.

''தமிழ் வரி வடிவங்களில், குறியீடுகளில் செய்ய விழையும் மாற்றங்களால் தமிழ் ஒலி வடிவமோ எழுத்துக்களோ பாதிக்கப்படப் போவதில்லை. தேவையற்ற குறியீடுகள்

குறைக்கப் படுகின்றன. எழுத்துக்கள் குறைக்கப்படவில்லை'' என்று குறிப்பிடுகின்றன. இது எனக்கு மிகமிக மனநிறைவை அளிக்கக் கூடிய ஒன்று. எழுத்துச் சீர்த்திருத்தம் என்ற பெயரால் குறியீடுகளில் செய்ய விழையும் மாற்றங்களையன்னியில் தமிழ் ஒலி வடிவ எழுத்துக்களே குறைக்கப்படும் என்ற எண்ணம் இன்றைக்கு புலவர் பெருமக்களிடத்திலே பரவி இருக்கின்ற காரணத்தால்தான் இந்த மாற்றமேகூட கூடாது, இந்த முன்னேற்றமேகூட தீது என்றெல்லாம் இன்றைக்கு வாதிடுகின்றார்கள்.

ஆனால் நம்முடைய மணவை முஸ்தபா அவர்கள் மிகத் தீர்க்கமாக - முடிந்த முடிவாக குறியீடுகளில் செய்ய விழையும் மாற்றங்களால் தமிழ் ஒலி வடிவமோ எழுத்துக்களோ பாதிக்கப்படப் போவதில்லை - தேவையற்ற குடுயீடுகள் குறைக்கப்படுகின்றன என்று கூறுகிறார். உதாரணமாக 'க' எழுதுகிறோம். பிறகு 'கு' எழுதுகிற போது, அதற்கு ஒரு தனி எழுத்து தேவைப்படுகிறது. 'க' எழுத்தோடு ஒரு குறியீடு போடுவதின் மூலம்-தனியாக 'கு' என்ற ஒரு புதிய எழுத்து தேவைப்படுகின்ற நிலை இல்லாமல் - 'க' என்ற எழுத்தி லேயே 'ஒரு குறியீடு' போட்டு - அந்தக் குறியிடு 'க' வுடன் போடும் போது 'கு' ஆக வேண்டும், 'ச' என்ற எழுத்தின் மீது போடும் போது, அது 'சு' ஆக வேண்டும், 'த' என்ற எழுத்தின் மீது குறியீடு போடும்போது அது 'து' ஆக வேண் டும் என்ற அந்தக் கருத்துப்படத்தான் - அப்படி அந்தக் குறி யீடுகள் குறைவாக இருக்கும்போது அச்சியற்றும்போதோ, தட்டச்சுச் செய்யும் போதோ, தொலை எழுதிக்குப்பயன்படும் போதோ, தொலைப் பதிவு [டெலிபிரிண்டர்] கணினி போன்ற சாதனங்களுக்குப் பயன்படும் போதோ அந்த நேரங் களில் குறியீடுகள் குறைக்கப்படுகின்றன என்று தெள்ளத் தெளிவாக மணவை முஸ்தபா எடுத்துக் காட்டியிருக்கிறார்.

இப்போதுதான் அவருக்கு 'சிற்பி' என்ற அந்தப் பட்டம் பொருத்தமானது என்று புரிகிறது. நான் இன்னும் ஒன்றைத் தெளிவாக்க விரும்புகிறேன். ஒரு கல்லை எடுத்து அதிலே ஒரு

சிற்பத்தை, சிலையை உருவாக்குவதென்றால் - அப்படியே அந்தக் கல்தான் சிலை என்று சொல்லிட முடியாது. அது நடுகல்லாக இருக்கலாம். சிலையாக இருக்காது. எனவே அந்தக்கல்லை சிலையாக்க வேண்டுமென்றால்-உளிகொண்டு அந்தக் கல்லிலே தேவையற்ற பகுதிகளையெல்லாம் செதுக்கி எடுத்துவிட்டு, இறுதியாக இதுதான் சிலை என்று தருபவன் தான் சிற்பி. அதைப்போலத்தான் தேவையற்ற குறியீடுகளைக் குறைத்து—கல்லிலே தேவையற்ற பகுதிகளையெல்லாம் செதுக்கச் செதுக்க சிலை உருவாவதைப்போல—தமிழை ஒரு சிலையாக ஆக்க வேண்டும் என்று முயலுகின்ற நம்முடைய மணவை முஸ்தபா உண்மையிலேயே சிற்பிதான். எனவே அவருக்கு அறிவியல் தமிழ்ச் சிற்பி என்கின்ற இந்தப் பட்டயம் சாலப் பொருந்தும் என்று இந்த அவையிலே நான் தெரிவித்துக்கொள்கிறேன், (பலத்த கையொலி)

தம்பி வலம்புரிஜான் ஒன்றைச் சொன்னார். அவர் எப்போதுமே அண்ணனைப் புகழ்வதில் சளைக்காதவர். அதிலும் அரசியல் மேகங்கள் கலைந்துவிட்ட நேரத்தில்—சூரியன் அவர் கண்ணுக்குஒளிமயமாகத்தெரிகின்றது. (பலத்த கைதட்டல்). வேறு முகாமிலே அரசியல் காரணமாக அவர் இருந்த போதும் என்னுடைய எழுத்துக்களை, பேச்சுக்களை வேறு இடத்திலிருந்தே பாராட்டுகின்ற — மெச்சுகின்ற தம்பிமார்களில் ஒருவராக வலம்புரிஜான் இருந்தார் என்பது எனக்குத் தெரியும். அவர் இங்கே பேசும்போது—'எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் அந்த நிகழ்ச்சியிலே பேசுவதற்கு முன்பு தலைவர் கலைஞர் நிறையப் படிக்கிறார், நிகழ்ச்சிக்கு என்று இல்லை, எல்லா நூல்களையும் நிரம்பப் படிக்கிறார்'' என்று சொன்னார். என்னைப் படி என்று சொன்ன காலத்தில் நான் படிக்கவில்லை. அதுவும் அறிஞர் அண்ணா அவர்களே நான் திராவிட நாடு இரண்டாவது இதழுக்கு 'இளமைப்பலி' என்ற தலைப்பில் கட்டுரை எழுதியிருந்ததை வெளியிட்டு விட்டு—பிறகு திருவாரூருக்கு வந்தபோது தொடர்ந்து நன்றாகப்படி, படித்து முடித்த பிறகு எழுதலாம் என்று

கூறினார்கள். அண்ணா அவர்கள் சொல்லி நான் கேட்காதது அது ஒன்றுதான்.

ஆனால் அதற்குக் கழுவாய் தேடிக்கொள்கின்றவகையில் இப்போது நிரம்பப் படிக்கின்றேன். நான் இல்லை என்று சொல்லவில்லை. தம்பி வலம்புரிஜான் இன்று மாத்திரமல்ல— அவருடைய "தாய்" பத்திரிகையிலேகூட அதைக் குறிப்பிட் டிருந்தார். எந்த இயக்கத்திலே உள்ள சொற்பொழிவாளர் களாக இருந்தாலும் சரி—நான் ஏதோ என்னுடைய இயக்கத்தை மாத்திரம் சொல்லவில்லை—அவர்கள் மாலை யிலே மேடை ஏறுகிறார்கள் என்றால் ஒரு மணி நேரமாவது அவர்கள் அன்று மாலையில் பேசப் போகின்ற விஷயத்தைப் பற்றிச் சிந்திக்கவேண்டும். அல்லது சொல்லப் போகின்ற கருத்துகளைப் பற்றி ஆழமாகப் படிக்கவேண்டும். ஐயப் பாடுகள் இருந்தால் புத்தங்களைப் புரட்டிப் பார்த்து விளக்கம்—தெளிவு பெறவேண்டும். அந்தப் பழக்கம் எல்லா இயக்கத்திலும் இருப்பவர்களுக்கு வருமேயானால் இன்று அறிவியல் தமிழ் மாற்றம் தேவை என்று சொல்லுகிறோமே, அதைப் போல அரசியல் தமிழிலும் நல்ல மாற்றம் ஏற்பட்டு விடும். எனவே படிக்கப் படிக்க நம்முடைய அறிவு ஆழ மாகிறது, சிந்தனை பெருகுகிறது. அப்படிப்பட்ட சிநதனை யோட்டத்தின் விளைவாக - ஆர்வத்தின் காரணமாக நம் முடைய அன்புக்குரிய மணவை முஸ்தபா அவர்கள் "காலம் தேடும் தமிழ்" என்ற இந்தக் கருவூலத்தை நமக்கெல்லாம் வழங்கியிருக்கிறார். அவரை கல்கி ராஜேந்திரன், தம்பி வலம்புரிஜான், உஷா சுப்ரமணியம் அம்மையார் ஆகியோ ரெல்லாம் வாழ்த்தியிருக்கிறார்கள்.

காலை முதல் வேறு தலைப்புகளிலே பலர் பேசியிருந் தாலும் கூட, பெருமதிப்புக்குரிய சி. எஸ். அவர்கள் முதற் கொண்டு அனைவரும் அவரைப் பாராட்டியிருக்கிறார்கள். அவருக்குக் கிடைக்கின்ற பாராட்டுகள்-வாழ்த்துக்கள் எனக்கு மகிழ்ச்சி ஊட்டக் கூடியவை; பெருமை தரக்கூடியவை. ஏனென்றால் இந்த மரியாதை உழைப்புக்குக் கிடைக்கின்ற

மரியாதை. உண்மைக்குக் கிடைக்கின்ற மரியாதை. அவருடைய ஆர்வத்திற்குக் கிடைக்கின்ற மரியாதை. தமிழ் மேலும் வளர வேண்டும்; முன்னேற வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு பாடுபடுகிறாரே அந்தப் பணிக்குக் கிடைக்கின்ற மரியாதை. அவர் உலகத்தையெல்லாம் சுற்றியிருக்கிறார். பல மொழிகளைப் பார்த்திருக்கிறார்.

அவர் இன்று நடத்துகின்ற யுனெஸ்கோ கூரியர் தமிழ் இதழ் நான் அறிஞர் அண்ணா அவர்களுக்குப் பிறகு அமெரிக்கா சென்றிருந்தபோது மால்கம் ஆதிசேஷய்யா அவர்களை அங்கே சந்தித்த போது அண்ணா அவர்கள் கூரியர் இதழை நடத்துவற்காக எடுத்துக்கொண்ட முயற்சிகளை எடுத்துச் சொல்லி அதற்கான ஆக்கமும் ஊக்கமும் தமிழ் மக்களிடமிருந்து கிடைக்க வேண்டும் என்பதை என்னிடம் விளக்கினார். எனவே இந்தக் கூரியர் இதழ் இன்றைக்கு நல்ல வலிவு பெற்று பரவலாக படித்த மக்களிடத்தில் அறிவியல் தமிழை வளர்ப்பதற்காகப் பயன்படுகின்றது என்று எண்ணுகின்ற போது நான் பூரிப்படைகின்றேன்.

இன்று 'காலம் தேடும் தமிழ்' என்று இந்த நூலுக்குத் தலைப்பு. கால்த்தைத் தேடுகின்ற தமிழ் அல்ல, காலம் தேடும் தமிழ்; காலம் தேடுகிறது, தமிழை! எந்தத் தமிழை? அறிவியல் தமிழை. அந்த அறிவியல் தமிழைத் தேடுகின்ற நேரத்திலே வருகின்ற இடையூறுகள் என்னென்ன? இவைகளைப் பற்றியெல்லாம் இந்த நூல் விரிவாகச் சொல்லுகிறது. அப்படிச் சொல்லும் போது ஒரு இடத்தில் அவர்கள் குறளையே எடுத்துக்காட்டி அழகாகக் குறிப்பிடுகிறார்.

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு"

என்பதை எடுத்துச் சொல்லி - வள்ளுவரே கூட எண், எழுத்து இரண்டும் கண் போன்றது; அந்தக் கண் போன்றது

என்று குறிப்பிடும்போது, நம்முடைய முஸ்தபா அவர்கள் அதற்குத் தருகின்ற விளக்கம் - எண் என்று வள்ளுவர் குறிப்பிடுவது அறிவியலை; எழுத்து என்று குறிப்பிடுவது இலக்கியத்தை எனக் கூறுகிறார். வள்ளுவர் எந்த இடத்திலும் குறளில் தமிழ் என்ற சொல்லைப் பயன்படுத்தவில்லை. ஏனென்றால் உலகத்திற்காக நூல் எழுதியவர் அல்லவா? அவர் தமிழனுக்காக மாத்திரம் எழுதவில்லை. எனவே அந்தக் காரணத்தால் தான் 'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ் விரண்டும் கண்ணென்ப வாழுமுயிர்க்கு' என்கிறார். எனக்கு இதிலே ஒரு ஐயப்பாடு. 'கண்ணென்ப வாழுமுயிர்க்கு' என்று சொல்லியிருக்கிறாரே; எல்லா உயிர்களும் எண்ணையும் எழுத்தையும் உணர முடியுமா? மனிதன் மாத்திரம்தானே உணரமுடியும். எப்படி வாழுமுயிர்க்கு என்று வள்ளுவர் சென்னார் என்று எண்ணிப்பார்த்தேன். எனக்குக் கிடைத்த விடை - வாழுமுயிர்க்கு - எல்லா உயிர்க்கும் எப்படி இரண்டு கண்களும் அவசியமோ அதைப் போல மொழிக்கு எண்ணும் எழுத்தும் அவசியம் என்றுதான் வள்ளுவர் குறிப்பிட்டிருக்க முடியும்.

(பலத்த கைதட்டல்)

மணவை முஸ்தபா அவர்கள் 'கணக்கை அடிப்படையாகக் கொண்ட அறிவியலும், எழுத்தை அடித்தளமாகக் கொண்ட இலக்கியங்களும் மக்களுக்கு இரு கண்களைப் போன்றவை யாகும் என்பது வள்ளுவர் வாக்கு" என்று அழுத்தந் திருத்தமாக - ஆணித்தரமாக தன்னுடைய வாதத்திற்கு வலிவு தேடுகிறார்.

இங்கே பலசெய்திகள் கூறப்பட்டன. மொழி பெயர்ப்பைப் பற்றியெல்லாம் பேசப்பட்டது. நானும் நண்பர் கல்கி ராஜேந்திரன் அவர்களும்கூட மேடையிலே பேசிக்கொண்டிருந்தோம்.

மூதறிஞர் ராஜாஜி அவர்கள் கூட அறிவியல் துறையிலே கட்டுரைகள் எழுதியபோது வடமொழியிலே உள்ள பல சொற்களுக்கு தமிழில் சில மாற்றங்களைச் செய்தார் என்றும் அவைகள் முழு வெற்றியை அளிக்கவில்லை என்றும் அவர்

சொன்னார், நான் கூட திரு.ராஜேந்திரன் அவர்களிடத்திலே சொன்னேன். ''ஆமாம், அவர் சாக்ரடீஸ் என்ற பெயரைக் கூட சோக்ரதர் என்று மாற்றிப் பார்த்தார். ஆனால் நாட்டு மக்களிடத்தில் சாக்ரடீஸ் என்ற அந்தப் பெயர்தான் நின்றதே தவிர, சோக்ரதர் என்ற பெயர் வழக்கத்திற்கு வரவில்லை. காரணம் சில பெயர்கள்-வேறு மொழியில் அது ஆங்கிலத் திலோ வட மொழியிலோ அல்லது வேறு எந்த மொழியிலோ வழக்கத்திற்கு வந்துவிடுமேயானல்—மக்களிடத்திலே பரவி நிலைத்து விடுமேயானால் அவைகளை எப்படியும் மாற்றியே தீரவேண்டும் என்கின்ற பிடிவாதப் போக்கு இருத்தல் ஆகாது என்பது என்னுடைய எண்ணம். கூடுமானவரையில் அந்தச் சொற்களையே பயன்படுத்தலாம்.

உதாரணத்திற்குச் சொல்கிறேன்; தேர்தல் நேரத்தில் ''உதயசூரியனுக்கு வாக்களியுங்கள்'' என்று சொல்லு கிறோம். (கைதட்டல்) அரசியலாக ஆக்கவேண்டாம்; உதாரணத்திற்காகச் சொல்லுகிறேன். அண்ணா காலத்தி லேயே ''ஆதரிப்பீர் உதய சூரியன்'' என்றுதான் விளம்பரங் களை அண்ணா கைப்பட எழுதுவார். உதயசூரியன் தமிழா? அல்ல. வடமொழிச் சொல். வடமொழிச் சொல்லே கூடாது என்பதற்காக ''ஞாயிறுக்கு வாக்களியுங்கள்'' என்று சொன் னால், வாக்காளர்கள் எல்லாம் தேர்தல் ஞாயிற்றுக்கிழமை நடைபெறுவதாக எண்ணிக் கொண்டு, தேர்தலில் நம்மை கவிழ்த்துடவிடக் கூடும். ஏனென்றால் ஒரு வேளை சனிக் கிழமை தேர்தல் நடைபெற்று ஞாயிறுக்கு வாக்களிங்கள என்று சொன்னால்-வாக்காளர்கள் சனிக்கிழமையன்று வாக்குச் சாவடிக்குப் போக மாட்டார்கள் (பலத்த சிரிப்பு) எனவே மொழி பெயர்ப்புகள். சொல்லாக்கம் இவைகளில் சிலவற்றை பிடிவதாகமாக மாற்றியே தீரவேண்டும் என்று நாம் எண்ணக் கூடாது.

என்னுடைய இளமைக்காலத்திலே ஒரு நினைவு. முரசொலி துண்டறிக்கைகளை கொள்கை விளக்கப் பிரச்சார அறிக்கைகளாக நான் வெளியிட்டுக் கொண்டிருந்தேன், அந்த

துண்டறிக்கை ஒன்றில் ஒரு முறை 'எளிமையும் நெளிமையும்' என்று எழுதி விட்டேன். ஒரு திருமண வீட்டில் அந்த முரசொலியை வைத்துக்கொண்டு அண்ணன் கவி. கா. மு. ஷெரீப் அவர்கள் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களோடு உரையாடிக் கொண்டிருந்தார், அப்போது கவி. கா. மு, ஷெரீப் அவர்களுக்கு இந்த இயக்கக் கொள்கைகள் அவ்வளவு பிடித்தமானவைகள் அல்ல. எனவே ஒரு குறை சொல்ல வேண்டுமென்பதற்காக அந்த முரசொலியை நாவல ரிடம் காட்டி, ''கருணாநிதி இப்படி எளிமையும், நெளிமையும் என்று எழுதியிருக்கிறாரே, 'நெளிமை' என்று ஒரு சொல் உண்டா'' என்று கேட்டார். நாவலர் உண்மையிலேயே அப்படி சொன்னாரா, அல்லது என்னைக்காப்பாற்ற வேண்டு மென்பதற்காகச் சொன்னாரா என்று எனக்குத் தெரியாது. ''இப்படி வார்த்தைகளை 'காயின்' பண்ணலாம். அதாவது புதிய சொற்களை உருவாக்கலாம்; நெளிமை என்று சொல் லும் போது நெளிதல் என்ற அந்தப் பொருள்தான் அதற்கு வருகின்றது. எனவே நெளிதலை நெளிமை என்று எழுதிய தில் தவறில்லை'' என்று சொன்னார்.

மணவை முஸ்தபா அவர்கள் போகின்ற வேகத்தைப் பார்த்தால் அது தவறில்லை என்று எனக்குத் தெரிகின்றது.

ஏனென்றால் மணவை முஸ்தபா என்றால் அவர் மணப் பாறை முஸ்தபா-திருச்சி மாவட்டம் மணப்பாறையிலே பிறந் தவர். மணப்பாறை என்பதைச் சுருக்கிச் சொல்ல வேண்டுமே யானால், ''மணப்பு'' என்றுதான் சொல்ல வேண்டும். ''மணவை'' என்று சொல்வதற்கு எதுவும் கிடையாது. எப்படி மணப்பாறை, மணவை ஆயிற்றோ, அதைப் போல நெளிதலும் ஏன் நெளிமையாக ஆகக் கூடாது என்று (பலத்த கைதட்டல்) எனக்கு பதினெட்டாவது வயதிலே ஏற்பட்ட சந்தேகத்திற்கு இப்போது விடை கிடைக்கின்றது.

முஸ்தபா அவர்கள் இங்கே பேசும்போது இடுகுறிப் பெயர் கூடாது, காரணப் பெயர்களை நாங்கள் மொழி

பெயர்க்கிறோம் என்றார், அதிலே நான் கொஞ்சம் கருத்து வேறுபாடு கொள்கிறேன். எல்லாவற்றுக்கும் காரணப் பெயரைத் தேடிக் கொண்டிருக்க முடியாது. அதனால்தான் ஆகாய விமானம், வான ஊர்தி என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கின்றோம். தரையிலே போகின்ற வண்டியை-வண்டி என்று அழைத்தோமே அது இடுகுறிப் பெயரா அல்லது காரணப் பெயரா? காரணப் பெயர் அல்ல. தண்ணீரிலே செல்லுகின்ற கப்பலை ஏன் கப்பல் என்று சொன்னோம்? எப்படி படகு என்று புழக்கத்திலே இருக்கின்றது. அந்தக் காலத்திலே நாவாய், கலம், மரக்கலம் என்றெல்லாம் இருந்திருக்கலாம். ஆனால் இன்றைக்கு கப்பல் என்கிறோம், படகு என்கிறோம், இவைகள் எல்லாம் கடலிலே போகின்ற காரணத்தால் கடல் ஊர்தி என்று சொன்னோமா? இல்லை. அதைப்போல ஆகாயத்திலே செல்லுகின்ற காரணத்தால் ஆகாய ஊர்தி விண்ணிலே பறக்கின்ற காரணத்தால் விண் ஊர்தி என்று சொல்ல வேண்டுமா? சொல்லத் தேவையில்லை. எப்படி படகு என்று ஒரு இடுகுறிப் பெயர் இருக்கிறதோ-எப்படி ஓடம், தோணி என்கிற இடுகுறிப் பெயர்கள் இருக்கிறதோ அதைப் போல ஏன் ''ஏரோப்பிளேனுக்கு'' ஒரு பெயர் இருக்கக்கூடாது? அதை ஏன் காரணப் பெயராக ஆக்க வேண்டும்?

தம்பி வலம்புரி ஜான் இங்கே வேகமாகப் பறக்கும்பழைய நாள் பறவையைப் பற்றி அழகாகச் சொன்னார். எனக்கே அது புதிய செய்தி. ''ஆலாப் பறவை'' என்று சொன்னார் அதைப் போல ஏன் ஆகாய விமானத்தைப் பார்த்து ''ஆலா'' என்று அழைத்திருக்கக் கூடாது? ''ஆலா'' என்று பல பேர் பேசி, பல பத்திரிகைகளிலே எழுதிப்பழக்கமாகிவிட்டால்-எதிலே டெல்லியிலிருந்து வந்தாய் என்று கேட்டால், 'ஆலா' விலே வந்தேன் என்று சொல்ல மாட்டோமா? இப்படி புழக்கத்திலே வரக்கூடிய அளவிற்கு நாம் சொற்களை உருவாக்க வேண்டும். அதுவும் தமிழ் முன்னேற்றத்திற்கு அறிவியல் தமிழை வளர்ப்பதற்கு ஏணியாக அமையும்.

இந்த நூலிலும் எழுதப்பட்டிருக்கின்றது. இந்த மண்ட பத்திலும்சுவர்களிலே எழுதப்பட்டுள்ளது. கம்பரடிப்பொடியும், கல்வெட்டு ஆராய்ச்சியாளருமான காரைக்குடி சா. கணேசன் எடுத்து தொகுத்த தமிழ் எழுத்துக்களின் வரலாறு எப்படி யெப்படி எல்லாம் மாறி இந்த நிலைமையைப் பெற்றிருக் கின்றன என்ற அந்த விவரத்தை இணைத்துள்ளார்கள். எழுத்துக்கள் எத்தனையோ மாற்றம் பெற்று இன்றைக்கு நாம் எழுதுகின்ற நிலையைப் பெற்றிருக்கின்றன.

பெரியார் அவர்கள் செய்த எழுத்து சீர்மையின் காரண மாக ஏழெட்டு எழுத்துக்கள் தமிழிலே குறைந்திருக்கின்றன. ஆனால் ஒலிக் குறைப்போ வரி வடிவமோ குறைந்து விடவில்லை.

இதற்கு முன்பு ''கருணநிதி'' என்று போட்டதை இப் போது ''கருணாநிதி'' என்று போடுகிறோம். ஏனென்றால் 'கா' என்பதற்கு கால் போடும்போது, 'ணா' என்பதற்கு மட்டும் கால் போடாமல் ஏன் சுழிக்க வேண்டும்? இதைத் தான் பெரியார் கேட்டார், அதன் காரணமாக ஏழு எழுத்துக் களுக்கு மேல் இன்றைக்குக் குறைந்திருக்கின்றன. மணவை முஸ்தபா அவர்கள் இந்த நூலிலே, குறியீடுகளை மட்டும் குறைத்து எழுத்துக்களைக் குறைக்காமல் அதே நேரத்தில் இந்த மொழியை தீட்டச்சு, கணினி (கம்ப்யூட்டர்), வேறு பல டெலிபிரிண்டர் போன்ற சாதனங்களில் நாம் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று குறிப்பிடுகின்றார். எப்படி இந்த வளைவுகள், சுழிகள் வந்திருக்குமென்று நான் கருதுகிறேன் என்றால், எழுதுகின்றவர்கள் சுருக்கமாகஎழுத அதைப் பயன் படுத்தியிருக்கின்றார்கள். இப்போதுகூட பத்திரம் எழுது பவர்கள் ''த்து'' என்று எழுதும்போது இரண்டையும் சேர்த்து எழுதி விடுவார்கள். இது எழுதும்போது சுருக்கமாக இருக்க லாம், ஆனால் அச்சேற்றும்போது தட்டச்சுச் செய்யும்போது அது சுருக்கமாக இருக்க முடியாது. ஏராளமான எழுத்துக்கள் இருக்கின்ற காரணத்தால்தான் நம்முடைய அறிவு இயக் கத்தை வேகமாக வளர்ப்பதற்கு அது பயன்பட முடியாமல்

போய் விடும் என்ற காரணத்திற்காகத்தான் நாம் இந்த ஒரு முன்னேற்றத்தை இந்த ஒரு இயக்கத்தை வலுப்படுத்துகின்ற காரியத்தைச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறோம்.

மொழி பெயர்ப்பைப் பற்றி அவர்கள் நிரம்பச் சொன்னார்கள். இங்கே ஒரு கட்டுரை படித்த நண்பர்கூட அதைப் பற்றிக் குறிப்பிட்டார். முஸ்தபா அவர்களேகூட இந்த மொழிபெயர்ப்புக்களைப்பற்றி அவருடைய நூலிலே குறிப்பிட்டிருக்கின்றார். இந்த நூலைப் படிக்கும்போது அது எனக்கு புதிய கருத்து. நீங்கள் பலரும்கூட அதை அறிந்திருக்க மாட்டீர்கள்.

'உமர்கயாம் அவர்களுடைய கவிதையைப்பற்றி முஸ்தபா குறிப்பிடுகிறார். உமர்கயாம் பற்றி நீங்கள் எல்லாம் என்ன கருதுகிறீர்கள்? உமர்கயாம் மது, மங்கை ஆகியவைகளைப் பாராட்டி, வரவேற்று அந்த மயக்கத்திலேயே கழித்து கவிதை பாடினார் என்று கருதுகிறோம். ஆனால் முஸ்பா எழுதியதை அப்படியே படிக்கிறேன்.

உமர்கயாம் கவிதைகளில் 'மஸ்த்' என்ற ஒரு சொல் நிரம்ப வருகின்றது. அந்த 'மஸ்த்' என்ற சொல்லினடியாகப் பிறந்தது மஸ்தான் என்ற சொல். குணங்குடி மஸ்தான், வாலை மஸ்தான் போன்ற இஸ்லாமிய சூஃபி மெய்ஞ்ஞானிகளைப்போன்று உமர்கயாம்-மெய்ஞ்ஞானியாக விளங்கியிருக்கிறார். மது-மங்கை இவைகளை விமர்சித்தது கிடையாது அல்லது அதற்கு அவர்ஆட்பட்டதும்கிடையாது.அடிமையானதும் கிடையாது. நெருங்கியதே கிடையாது. நெருங்கினால் அல்லவா அடிமை ஆக. அப்படிப்பட்ட நல்ல மெய்ஞானியாக விளங்கியவர் உமர்கயாம். ஆனால் நாம் எண்ணியது மது, மங்கையோடு உல்லாசமாக தான்மாத்திரம் பொழுதைக் கழித்தவரல்ல, மற்றவர்களையும்கழிக்கஉற்சாகப்படுத்தியவர் அவர் என்பதுதான். முஸ்தபா கூறுகிறார். ''மஸ்த்'' என்ற பாரசீகச் சொல்லின் உட்பொருளை அறிந்து கொள்ள இயலாத ஃபிட்ஜெரால்டு என்ற ஒரு வெள்ளைக்கார மொழிபெயர்ப்

பாளர் - மஸ்த் என்றால் இறை மயக்கம் என்று பொருள்- பாரசீக மொழியில் அதை வெறும் மயக்கம் எனக் கொண்டு, மயக்கம் தருவது மதுதானே எனக்கருதி, உமர்கயாமின் கையில் மதக்கோப்பையையே தன் மொழிபெயர்ப்பின் மூலம் ஃபிட்ஜெரால்ட் தந்துவிட்டார். மனமயக்கம் தரும் மங்கையையும் கவிதையையும் இணைத்துக் கொண்டார். ஆங்கிலமொழி பெயர்ப்பைப் படித்த கவி தேசிகவிநாயகம் பிள்ளை, உமர் கயாமை கவிதை, மது, மங்கைப் பித்தராகத் தம் ''உமர் கயாம்'' பாடலிலே கூற, அதைப்படித்த கவிஞர் கண்ணதாசன் உமர்கயாமை ''மதுக்கோப்பையிலே குடியிருக்கும்'' மடாக்குடியராக தம் பாடலில் வர்ணிக்கலானார். இது நமது கல்கி ராஜேந்திரன் அவர்களுக்குக்கூட புதிய செய்தியாகத் தான் இருக்கும். 'அப்படியா?' என்று வியப்பிலே ஆழ்த்துகின்ற செய்தி. 'ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு' என்று கவிஞர் கண்ணதாசன் எழுதியதற்குக் காரணம் அவரல்ல, தேசிக விநாயகம் பிள்ளை. தேசிக விநாயம் பிள்ளை அப்படி எழுதியதற்குக்காரணம் அவருக்குக்கிடைத்தஆங்கிலமொழிபெயர்ப்பு. ஆங்கில மொழிபெயர்ப்பு அப்படித்தவறாகப் போகக் காரணம் ஆழ்ந்து அதைப்புரிந்து கொள்ளாமல் இறை பயக்கத்தை இரவு மயக்கமாக மொழி பெயர்த்தது.

இன்னொன்று. ஒரு வேடிக்கையான உதாரணத்தை முஸ்தபா இந்த நூலிலே குறிப்பிடுகிறார். அப்படியே படிக்கிறேன்.

ஒருசமயம்தமிழ்நாளிதழ் ஒன்றில் ஜீலம்நதியில் திடீரென ஏற்பட்ட வெள்ளப்பெருக்கையும் அதனால் ஏற்பட்ட விளைவுகளையும் பற்றிய செய்தி வெளியிடப்பட்டிருந்தது. அதில் 'ரயில் தண்டவாளத்தில் படுத்து உறங்கிக் கொண்டிருந்த நூறு பேர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனர்' என்று செய்தி வெளியிடப்பட்டிருந்து. ஆனால் உண்மையில் தண்டவாளத்தின் மீது தலைவைத்து யாருமே தூங்கவும் இல்லை. அவர்கள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்படவும் இல்லை.

பிறகு எப்படி இப்படியொரு செய்தி இடம்பெற்றது. சொல்லுக்கு சொல் மொழி பெயர்க்க முனைந்த மொழி பெயர்ப்பாளரின் திருவிளையாடலால் ஏற்பட்டதுதான் இந்த தவறு மொழி பெயர்ப்புக்கென அவரிடம் கொடுக்கப்பட்ட ஆங்கிலச் செய்தியில் ''Hundred Rail sleepers were washed'' என்ற வாக்கியத்தில் காணும் ''Sleepers'' என்ற சொல்லை. சொல்லுக்குச் சொல் மொழி பெயர்த்து, ''தூங்குபவர்'' என்ற பொருள் கொண்டு, மொழி பெயர்த்ததின் விளைவே இது. இங்கு ''Sleepers'' என்ற சொல் இரு தண்டவாளங்களுக்கிடையே பிடிமானத்திற்காகப் போடப்பட்ட குறுக்குக்கட்டை என்பதைத் தெளிவாக தெரிந்து கொள்ள இயலாததோடு, வாக்கியத்தின் சொற்கள் முழுமையும் இடத்துக்கும் சூழ் நிலைக்கும ஏற்பத் தரும் கருத்துப் பிரிவை மனதில் வாங்கி, அதற்கேற்ப மொழி பெயர்க்கத்தவறியதின் விபரீத விளைவே இத்தகைய தவறான மொழிபெயர்ப்பு என்று குறிப்பிடுகிறார்.

இன்னொரு இடத்தில், உலகத்திற்கே ஒரு பெரிய ஆபத்துஏற்பட்டதே- ஹிரோஷிமாவில் அணுகுண்டு! அது மொழிபெயர்ப்புத் தவறினால் ஏற்பட்டது.

எப்படி அந்த மொழி பெயர்ப்பு தவறு ஏற்பட்டதாம்? இரண்டாவது உலக மகா யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் அமெரிக்க நாடு ஜப்பானை எச்சரிக்கின்றது. உடனடியாக பணிந்துவிடு, என்று எச்சரிக்கின்றது. பணிந்து விடுகிறேன் என்று ஜப்பான் பதிலனுப்பியிருக்குமேயானால். அணுகுண்டு நிச்சயமாக வீசப்பட்டிருக்காது. பணிந்து விடு என்று சொன்னதும் - அவர்கள் ஜப்பான் மொழியில் ''வோகுசட்சு'' என்று பதிலளித்தார்கள். சில நேரங்களில் தாய்மொழியைப் பயன்படுத்துவதால் ஏற்படும் ஆபத்து இது. ''மோகுசட்சு'' என்று ஜப்பான் மொழியிலே சொன்னதற்கு என்ன பொருள் என்றால் ''உங்கள் எச்சரிக்கையை பரிசீலிக்கிறோம். ஆனால் சற்று தாமதமாக பதிலளிக்கிறோம்'' என்பதாகும். அமெரிக்காவில் அதை மொழி பெயர்த்தவன் — ''உங்கள் எச்சரிக்கையை நிராகரிக்கிறோம்'' என்று ஜப்பான் சொன்னதாக சொல்லி

விடுகிறான். உடனடியாக அணுகுண்டு போடச் சொல்லி அமெரிக்கா உத்தரவுபோட்டு பல்லாயிரக் கணக்கானவர்கள்- ஒரு மொழி பெயர்ப்புத் தவறால் இந்த உலகத்தை விட்டு மறைந்தார்கள். இன்னமும் இந்த துக்க தினத்தை உலகம் அனுஷ்டித்துக் கொண்டிருக்கின்றது.

இவைகளையெல்லாம் தேடிப் பிடித்து இந்த நூலாகத் தந்திருப்பவருக்கு ஒரு சாதாரணவெள்ளைப்பட்டாடைதானா? நூலால் ஆன பொன்னாடைதானா? பொன் தகட்டாலேயே ஆடைசெய்து (கைதட்டல்) அவருக்கு அணிவிக்க வேண்டும். அவ்வளவு கடும் உழைப்பை இந்த நூல் மூலமாக மணவை முஸ்தபா அவர்கள் நமக்கு தந்திருக்கிறார்.

அத்தகைய ஆற்றலாளருடைய அன்பும் பண்பும் நேசமும் பாசமும் கொண்ட அந்த உள்ளத்திற்கும், அவர் தமிழின்பால் கொண்டிருக்கின்ற பற்றுக்கும், வெறும் பற்று மாத்திரம் போதாது, தமிழை உலக மொழிகளிலே ஒன்றாக நிலை நிறுத்த வேண்டும் என்று கொண்டிருக்கின்ற ஆர்வத்திற்கும் என்றென்றும் நாம் கடமைப்பட்டவர்கள், அவருக்கு உறுதுணையாக இருக்க வேண்டியவர்கள், அவருக்கு ஒத்துழைப்புத் தர வேண்டியவர்கள். தருவோம் என்பதையே அவருக்கு நல்வாழ்த்தாக இன்றைக்கு நான் வழங்கி விடை பெறுகின்றேன்.

மணவை முஸ்தபாவின் 'காலம் தேடும் தமிழ்' நூல் வெளியீட்டு விழாவில் (18-6-88) கலைஞர் உரை.

தமிழுக்கு ஒரு விழா

தமிழுக்கு ஒரு விழா

இன்று உமறுப் புலவர் தமிழ்ப் பேரவையின் சார்பில் "தமிழுக்கு ஒரு விழா" எடுக்கின்ற இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இந்த இனிய மாலை நேரத்தில் உங்களை யெல்லாம் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பைப் பெற்றமைக்காகப் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இங்கே அறிமுக உரையாற்றிய அன்பிற்குரிய பேராசிரியர் ஹமீது அவர்கள் "நானும் அரசியல் பேசமாட்டேன், விழாவின் சிறப்பு விருந்தினர் கலைஞர் அவர்களும் பேச மாட்டார்" என்று உறுதி அளித்தார். அப்படி அளித்த உறுதி மொழியை அவர் காப்பாற்றினாரோ இல்லையோ எனக்குத் தெரியாது (சிரிப்பு). எனக்காக அவர் அளித்த உறுதி மொழியை நான் நிச்சயமாகக் காப்பாற்றுவேன், எந்த நேரத்திலும், அளித்த உறுதி மொழிக்கு மாறாக நடந்து கொண்டவன் நானல்ல (கைதட்டல்), என்ற காரணத்தாலும், என் பொருட்டு இன்னொருவர் உறுதிமொழி அளித்திருக்கின்ற காரணத்தால் அதை மீறக்கூடாது என்ற நயத்தக்க நாகரீகம் படைத்தவன் என்ற காரணத்தாலும் நான் நிச்சயமாக அரசியல் பேச மாட்டேன்.

ஆனால் நான் பேசுகின்ற சில கருத்துக்கள் இன்றுள்ள சூழ்நிலையில் அரசியலாக உங்களுக்குத் தோன்றுமேயானால் அதற்கு நான் பொறுப்பாளி அல்ல. அப்படி தவறாக உணர்ந்து கொள்வது உங்கள் குற்றமே யல்லாமல் அது என் குற்றமாக நிச்சயமாக இருக்க முடியாது (கைதட்டல்).

ஹமீது அவர்கள், ஒருபள்ளியில் நடைபெற்றவிவகாரத்தை வெகு விரிவாக இங்கே குறிப்பிட்டார். மாணவனிடத்திலே ஆய்வு செய்தவர், ''ஜனகனின் வில்லை ஒடித்தது யார்?'' என்று கேள்வி கேட்டு, அவன் 'நான் ஒடிக்கவில்லை சார்'' என்று பதில் சொல்லி, கல்வித்துறையின் தலைமையிலேயே இருந்தவர் வரை பதில் சொல்லத் தெரியாத கேள்வியாக— கேள்வியின் குற்றம் அல்ல, அதைப் புரிந்து கொள்பவரின் குற்றமாக—அதை அவர் இங்கே குறிப்பிட்டார்.

இன்றைக்கும் ''வில்'' (உயில்) பிரச்சினை தமிழ்நாட்டில் பெரும் பிரச்சினையாக இருக்கின்றது (பலத்த கைதட்டல்— சிரிப்பு)

இந்தப் புதுக் கல்லூரியில்என்னை அழைப்பது என்பதும்- நான் அடிக்கடி வருவது என்பதும் இயல்பான ஒன்றாகும். நான் தஞ்சையில் நடைபெற்ற ஒரு கவியரங்கத்தில் என்னு டைய தலைமை முன்னுரையில் குறிப்பிட்டேன்.

''பேழைக்குள் இருக்கின்ற பணத்தை ஏழை எடுத்து எடுத்துப் பார்த்து மகிழ்வதைப் போல், என்னை அழைத்து அழைத்து மகிழ்கின்ற நண்பர்களே'' என்று குறிப்பிட்டேன். பேழைக்குள் ஒரேயொரு ரூபாய் நாணயத்தை ஏழை வைத்தி ருப்பான். அதை காலையிலே ஒரு முறை, மாலையிலே ஒரு முறை, இரவு தூங்கப் போவதற்கு முன் ஒரு முறை எடுத் தெடுத்துப் பார்த்து மகிழ்ந்து, மறுபடியும் அந்தப் பேழைக் குள்ளேயே வைத்து, பிறகு மீண்டும் மறுநாள் காலையில் எடுத்துப் பார்ப்பான். இருப்பது அவனுக்கு ஒரேயொரு நாணயம். அதனால் அதை எடுத்துப் பார்த்துவிட்டு, செல வழிக்காமல் வைத்து விடுவான். அதைப் போலவே நீங்கள் என்னை அழைத்து அழைத்து மகிழ்கிறீர்கள். அந்த ரூபாய் நாணயத்தைப் பார்த்து ஏழை மகிழ்வதைப் போல எனக் கென்று நீங்கள் இருக்கின்ற காரணத்தால்— உங்களுக்கு என்று நான் இருக்கின்ற காரணத்தால் (கைதட்டல்) அழைத்து அழைத்து மகிழ்கிறீர்கள்.

சென்ற முறை நான் இந்தக் கல்லூரி விழாவிலே சமுதாய உணர்வுகளைப் பற்றி—சமுதாயப் புரட்சி பற்றி நீண்டதோர் உரையாற்றினேன். இங்கே விழாத்தலைவர் தம்பி ஸ்ரீ ராமன் குறிப்பிட்டதைப் போல், அன்றைக்கு இப்படிப்பட்ட உறுதியான மேடை இல்லை. அன்று உருவாக்கப்பட்ட மேடை ஒன்று இருந்தது. மறுநாள் அந்த மேடை எடுக்கப்பட்டு விட்டது. தற்காலிகமான மேடை அது. இன்றைக்கு அமைக்கப் பட்டிருப்பது உறுதியான மேடை. நிரந்தர மேடை. இந்த உறுதியான மேடையில் நின்று உங்களையெல்லாம் காணும் போது நான் மெத்த உவகையடைகின்றேன்.

உமறுப் புலவருடைய பெயரை எண்ணும்போதே அவர் யாத்த சீறாப்புராணம் நம்முடைய அகக்கண்ணின் முன்னால் புரண்டுகொண்டேயிருக்கும். கடந்த ஆண்டு நானும், அருமை நண்பர் அப்துல் சமத் அவர்களும் ஹமீது அவர்களும் கலந்து கொண்டு அண்ணன் கவிஞர் கா. மு. ஷெரீப் அவர்கள் எழுதிய சீறாப்புராணம் நூல்வெளியீட்டுவிழாவில் உமறுப்புலவருடைய கவி ஆற்றலை புலமைத் திறமையை எடுத்துக் காட்டுகின்ற வாய்ப்பினைப் பெற்றிருந்தோம், அந்தகைய ஒரு பெரும் புலவருடைய பெயரால் புதுக்கல்லூரியில் ஒரு தமிழ்ப்பேரவை உருவாகியிருப்பது மிகவும் பாராட்டத்தக்க - வரவேற்கத்தக்க ஒன்றாகும். அந்த உமறுப்புலவருக்கு பலவகையிலும் உதவி, சீறாப்புராணம் வெளிவரக் காரணமாக இருந்த வள்ளல் சீதக்காதி பற்றியும் இங்கே குறிப்பிட்டார்கள்.

''ஓர் தட்டிலே பொன்னும். ஓர் தட்டிலே நெல்லும் ஒக்க விற்கும் கார் தட்டிய பஞ்சகாலத்திலும் ஆர் தட்டினும் தட்டு வராமலே அன்னதானத்திற்கு மார் தட்டிய துரை மால் சீதக்காதி வரோதயனே'' (கைதட்டல்) என்கின்ற பெரும் புகழுக்குப் பாத்திரமானவர் சீதக்காதி. அத்தகைய சீதக்காதி யினுடைய அரும் துணையினைப் பெற்று உருவாக்கப்பட்ட சீறாப் புராணத்தினுடைய ஆசிரியர் உமறுப் புலவருடைய பெயரால் இந்தப் பேரவை அமைத்திருக்கின்றது.

இந்தப் பேரவையிலே நடைபெறுகின்ற இந்த விழா "தமிழுக்கு ஒரு விழா.". தமிழ் என்றுமே விழாமல் தடுப்பதற் காக தமிழுக்கு ஒரு விழா நாம் எடுக்கின்றோம். இதிலே நாம் எவ்வளவு உவகைகொண்டிருக்கின்றோம். அதிலும் குறிப்பாக ஹமீது அவர்கள் மாணவச் செல்வங்களோடு என்னை வந்து இந்த விழாவிற்கு வரவேண்டுமென்று அழைத்தபோது நான் தட்டாமல் தயங்காமல் ஒத்துக்கொண்டேன். விழா நடக்கின்ற இந்தமாட்சியைக்காணுகின்றநேரத்தில், ஹமீது அவர்களுக்கு ஏற்பட்ட உணர்ச்சிப் பெருக்கம் காரணமாக—சில நேரங்களில் நாம் கூட பார்த்திருக்கின்றோம், மணவிழாக்களில் வராத விருந்தினர்கள் யாராவது வந்து விட்டால் மண வீட்டிற்குச் சொந்தக்காரர்களுக்கு கையும் ஓடாது, காலும் ஓடாது. பேச்செல்லாம், தடுமாறும். ஒருவரை வாருங்கள் என்று சொல்வதற்குப் பதிலாக இன்னொருவரைப் பார்த்து "வாருங்கள், வாருங்கள்" என்று அழைப்பார்கள். அவர் ஏற் கனவே வந்தவராக இருப்பார்; அதைப் போலத்தான் இங்கே நம்முடைய ஹமீது அவர்கள் பேசுகின்ற நேரத்தில் கூட "காலை அரும்பி,பகலெல்லாம் போதாகி, மாலைமலரும் இந் நோய்" என்று சொல்வதற்குப் பதிலாக "காலை அரும்பி, பகலெல்லாம் போதாகி. மாலை அரும்பும்இந்நோய்" என்று சொன்னார். ஒரு வேளை மாலைக்குப் பிறகு மலருமோ என்னவோ எனக்குத்தெரியாது. அதை தவறு என்று எடுத்துக் கொள்ள முடியாது. அவ்வளவு மகிழ்ச்சி, அவ்வளவு உற்சாகம் காரணமாகத்தான் அவர்களேகூட தட்டுத் தடுமாறுகின்ற நிலைமை ஏற்பட்டது என்றால் அவர் குறளை முழுமையாகப் படித்தவர் அல்ல என்று யாரும் கூற முடியாது. அதற்கு விளக்கம்கூறுவதில் வித்தகராக அவர் விளங்குகிறார். எனினும் நம்மையெல்லாம் கண்டதில் அவ்வளவு மகிழ்ச்சி அவருக்கு ஏற்பட்டிருக்கின்றது. அதைப் போலத்தான் உங்களையெல் லாம் காண்பதில் எனக்கும் பெருமகிழ்ச்சி ஏற்பட்டிருக்கின்றது

மாணவர்கள் மத்தியில் இன்றைக்கு நான் நின்று கொண் டிருக்கின்றேன். நான் மாத்திரமல்ல, இந்த நாட்டின் எதி

காலமே மர்ணவர்கள் மத்தியிலேதான் நின்றுகொண்டிருக் கின்றது (கை தட்டல்)

என்னென்ன நினைவுகள்—என்னென்ன விபத்துக்கள்— எங்கெங்கே ஏறபட்டாலும் அவற்றையெல்லாம் சமாளிக்க கூடிய ஆற்றல் பெற்ற அரிமாக்கள் என்னைச் சுற்றி மாணவ வடிவங்களில் அமர்ந்திருக்கின்ற காட்சியினை நான் காணு கின்றேன்,

தமிழகத்தின் வருங்காலம் உங்களை நம்பித்தான் இருக் கின்றது என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். நாங்களெல்லாம் ஐம்பதைக் கடந்து, அறு பதைக் கடந்த—ஏன் என்னைப் பொறுத்தவரையில் அறுபத்து நான்கைக் கடந்துள்ள நிலை. ஹமீது நான் நல்ல உடல் நலத்தோடு இருக்கிறேன் என்று குறிப்பிட்டார். உடல் நலம் இருந்தாலும் கூட என்னுடைய உள்ளத்தில் ஏதோ ஒரு வித மான இனம் தெரியாத துன்பம் என்னைத் துளைத்துக் கொண்டிருக்கிறது, ஏன்? எதற்காக? தனிப்பட்ட முறையில்லா? அல்லது என்னுடைய குடும்பத்திற்காகவா? அல்லது என்னு டைய பிள்ளை குட்டிகள், பேரன் பேத்திகளின் எதிர்காலம் என்னவாகுமோ என்பதற்காகவா? அல்ல.

இந்தத் தமிழ்ச் சமுதாயம் இடையிலே கெட்டது போதாதா? இன்னுமா கெடப் போகிறது என்ற அந்த ஆதங் கத்தின் காரணமாகத்தான் இனம் தெரியாத ஒரு துன்பம் என்னைத் துளைத்துக் கொண்டிருக்கிறது. எதையும் எதிர் பார்த்து அல்ல. எதிர்பார்க்க வேண்டிய இடத்தில் நான் இல்லை. ஏனென்றால் இருந்து விட்டு வந்துவிட்ட இடம் தான் அந்த இடம். எனவே அந்த இடத்திற்காக, அங்கே போய் அமர வேண்டும் என்பதற்காக அல்ல. நான் சொல்வது என்னுடைய உடன் பிறப்புகளை உணர்ச்சிப் பிழம்பாக ஆக்கக் கூடும். என்னை நேசிப்பவர்களுக்கு, பாசம் கொண்ட வர்களுக்கு இதயம் கூட கொஞ்சம் வேகமாகத் துடிக்கக்கூடும் சில நேரங்களில் நான் எண்ணிக் கொள்வதுண்டு. ''இன்னும் வாழ வேண்டுமா?'' என்று, அப்படி எண்ணுகின்ற நேரத்தில் விரைவில் நமக்கு ஒருமுடிவு ஏற்பட்டு விடக்கூடாதா என்றும்

நினைப்பதுண்டு, அப்படி நினைக்கும்போது—அப்படி ஆகி விட்டால் நம்முடைய பிள்ளை குட்டிகள், பேரன் பேத்திகள் என்ன ஆவார்கள், கதறி அழுவார்களே என்கின்ற கவலை எனக்கு ஏற்பட்டதில்லை. என்னை நம்பியிருக்கின்ற தமிழ் உணர்வு கொண்ட மக்கள் என்ன ஆவார்கள்? அவர்களுக் காகவாவது இன்னும் சில காலம் இருக்க வேண்டும். ஆயனைப் பற்றிய ஆசை அல்ல. உயிர் வாழ வேண்டும் என்ப தல்ல. 64 வயதிற்குப் பிறகு—64 என்பது இந்தக் காலத்தில் அதிகமான வயதல்ல. அந்தக் காலத்தில் மணி விழா கொண் டாடுவது ஆச்சரியமான விஷயம். இப்போது மனிதனின் சரா சரி வயது மிகவும் உயர்ந்து விட்ட காரணத்தினால் 64 என் பது அப்படி ஒன்றும் பெரிய வயது அல்ல. ஆனாலும் கூட எனக்கு ஏற்படுகின்ற கவலை எல்லாம் இந்தத் தமிழகத்தை நாதியற்ற நிலையிலே போக விட்டுவிட்டுப் போய்விடுவதா என்கின்ற அந்தக் கவலைதான்.

ஏதோ என்னைத் தவிர உங்களைக் காப்பாற்ற வேறு யாரும் இல்லை என்ற அகம்பாவமோ இறுமாப்போ எனக்கு கிடையாது. அகம்பாவத்தைக் கெல்லி எறிந்தவன்; அண்ணா வின் பாசறையிலே பயின்றவன்; ஆணவம் என்றைக்கும் என்னுடைய இதயத்தின் தாழ்வாரத்தில் கூட தலைகாட்டி யது கிடையாது.

ஆனால் என்னால்தான் முடியும். நான் தான் செய்வேன் என்கின்ற உச்சாணிக் கொம்பிலே ஏறிக்கொண்டு பேசுகின்ற பேச்சல்ல இது. உங்களுக்கா —எதிர்கால தமிழ்ச் சமுதாயத் திற்காக — பணியாற்றுகின்ற வேலைக்காரனாக இன்னும் எத்தனை நாள் இந்தத் தமிழ்நாட்டில் நான் இருப்பேன்? அப்படி இருக்கின்ற காலகட்டத்தில் இந்தத் தமிழ்நாட்டை தூய்மைப்படுத்த வேண்டாமா? இந்த நாட்டின் உரிமை களைப் பெற்றுத் தரவேண்டாமா?

இந்த மாநில மக்கள் பேசுகின்ற மொழி தமிழ்மொழி— அந்த மொழியைக் காப்பாற்ற வேண்டாமா? தமிழர்களின்

உரிமைகளைப் பாதுகாக்க வேண்டாமா? எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம்—எனினும் இந்தியத் துணைக் கண்டத்தில் பல்வேறு இனங்கள் உண்டு. ஒரு இனம் மற்றொரு இனத்தைப் பகைத்துக் கொள்ளக் கூடாது என்பது தான் கொள்கையாக இருக்க முடியுமே தவிர, ஒரு இனத்தின் மேன்மையை, உயர்வை, உரிமையை-விட்டுத் தந்துவிட்டு நாம் ஒற்றுமைத்தத்துவம் பேசிக் கொண்டிருக்க முடியாது.

இங்கே வீற்றிருக்கின்ற நாம் பல்வேறு சாதிப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். இந்துமதக்காரர்கள், இஸ்லாமிய மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள், கிறித்துவ மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றெல்லாம் இருக்கலாம். இருந்தாலும் நான் உங்களையெல்லாம் பார்க்கின்ற பார்வை, ''தமிழ்ச்சாதி மக்கள்'' என்ற அந்தப் பார்வைதான்.

அந்தத் ''தமிழ்ச் சாதிக்கு—அந்தத் தமிழ் குலத்திற்கு ஒரு நல்ல எதிர்காலத்தை உருவாக்குவதற்கு நாம் பாடுபட வேண்டாமா? பணியாற்ற வேண்டாமா? என்ற அந்தத் கவலைதான் என்னுடைய உள்ளத்தை வாட்டிக் கொண்டிருக்கிறது. அந்த வாட்டம் போக்க தமிழகத்தில் உள்ள இளைஞர்கள், மாணவச் செல்வங்கள்—எனக்காக அல்ல—உங்களுக்காக, என்னைப் போன்ற சிலருக்காக அல்ல—உங்கள் சந்ததிக்காக, தமிழன்என்ற ஒரு சொல்-தமிழ் என்ற ஒரு சொல் எதிர்காலத்தில் அகராதியில் மாத்திரம் இடம் பெறும் சொல் என்று இல்லாமல் என்றென்றும் இந்த இனம் செழித்தோங்கி, வளத்தோடு வலிமையோடு வாழ்கிறது என்ற நிலை உருவாக வேண்டும். அதைத்தான் என்னை ஆளாக்கிய தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் 1966 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் இறுதிக் கிழமையில் விருகம்பாக்கத்தில் நடைபெற்ற மாநாட்டிலே எடுத்துரைத்தார்.

இந்த இயக்கம் இன்னும் ஐம்பதாண்டு காலப் பணிக்காகத் தேவைப்படுகின்றது. தமிழர்களுடைய கலை, கலாச்சாரம், இலக்கியம், வரலாறு, மரபு, மொழி, இனம் இவை

களையெல்லாம் காப்பாற்ற இந்த இயக்கத்தின் தேவை இன்னும் ஐம்பதாண்டு காலத்திற்கு வேண்டும் என்று அண்ணா சொன்னார். அவர் சொன்னது 66 ஆம் ஆண்டு இறுதியில்.

அப்போது அவருக்குத் தெரியாது. இடையில் பத்தாண்டு கால தொய்வு இந்தச் சமுதாயத்திற்கு ஏற்படும் என்று. எனவே அப்போது இன்னும் ஐம்பதாண்டுக்குத் தேவை என்றார். இந்தத் தொய்விற்குப் பிறகு நான் கருதுவது— இந்த இயக்கத்தின் பணி இன்னும் நூறாண்டு காலத்திற்குத் தேவைப்படுகின்ற பணியாக இன்றைக்கு ஆகிவிட்டிருக்கின்றது. அந்தப் பணிக்கு நீங்கள் எல்லாம்—எங்கள் பின்னால் இருக்க வேண்டும். நாங்கள் முன்னால் இருப்போம் என்பதற்கு அடையாளமாகத்தான் — நீங்கள் எங்கள் பின்னால் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன்.

முன்னால் இருப்பது முடி புனைவதற்காக அல்ல. முன்னால் இருப்போம் என்று சொல்வது தமிழை, தமிழர்களைக் காப்பாற்றுகின்ற போராட்டத்தில் முதல் பலியாக ஆவதற்கு முன்னால் இருப்போம் என்ற அந்தப் பொருளில் சொல்கிறேனே அல்லாமல் வேறல்ல.

நான் ஒரு வாரப் பத்திரிகையிலே இரண்டு நாட்களுக்கு முன்பு சில கருத்துக்களைப் படித்துப் பார்த்தேன். மனோன்மணீயம் சுந்தரனார் பாடிய "நீராரும் கடலுடுத்த" என்ற பாடல் குறித்து புலவர் பெருமக்கள் தங்கள் கருத்துக்களை கூறியிருந்தார்கள். அந்தப் பாடல் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை அவர்களால் இயற்றப்பட்டது. தமிழகத்தில் முதலமைச்சர் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டிருந்த போது— அரசு விழாக்களில், தமிழ்த்தாய் வாழ்த்தாக பல இடங்களில் பல பாடல்களைப் பாடிக் கொண்டிருக்கின்றார்கள். தமிழ்த் தாய் வாழ்த்து என்று நிரந்தரமாக ஒரு வாழ்த்துப் பாடல் தேவை. அது அரசு விழாக்கள் அனைத்திலும் பாடப்பட வேண்டும், விழா இறுதியில் தேசிய கீதம் பாடுவதைப் போல, தொடக்கத்தில் தமிழ்த் தாய் வாழ்த்து வேண்டும், அதற்கு

எந்தப் பாடலைத் தேர்ந்தெடுக்கலாம் என்று பார்த்து, சுந்தரம் பிள்ளை எழுதிய இந்தப் பாடலைத் தேர்ந்தெடுத்தோம். இங்கே கூட அந்தப் பாடல் தொடக்கத்தில் பாடப்பட்டது.

அந்தப் பாடலில் ஓரிரு வரிகளை அப்போது வேண்டா மென்று அகற்றி விட்டோம். தமிழன் உயர்வைக் குறிப்பிடு கின்ற நேரத்தில் ''ஆரியம் போல் உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதையா உன் சீர் இளமை'' என்று வருகின்ற வரிகளை அகற்றி விடலாம் என்று சொன்னேன். புலவர்கள் 'அந்த வரிகள் இருப்பது சரிதானே, ஆரியம் என்றால் வட மொழிதானே, அது உலக வழக்கு அழிந்து ஒழிந்த மொழி தானே, அந்த வரியை ஏன் நீக்க வேண்டும்' என்று கேட்டார் கள். நான் சொன்னேன். ''இது வாழ்த்துப் பாடலில் ''அழிந்து'' ''ஒழிந்து'' போன்ற அமங்கலச் சொற்கள் இல்லாமல் இருந்தால் எல்லா விழாக்களிலும் இதனைப்பாட வசதியாக இருக்கும் அல்லவா, எனவே அந்த வரிகளை அகற்றி விடலாம்'' ஏன்று சொன்னேன். புலவர் பெருமக்கள் அதனை ஏற்றுக் கொண்டார்கள். பிறகு அது அரசு விழாக் களில் நிரந்தரப்பாடலாக ஆயிற்று.

அது பற்றி ஒரு சர்ச்சை, ஒரு பெரும் புலவர் அது குறித்து சர்ச்சை எழுப்பி அதைப்பற்றி பெரும் புலவர்களும் தமிழ்ப் பேராசிரியர்களும் தங்கள் கருத்துகளைச் சொல்லியி ருக்கின்றார்கள். அதில் ''எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெரும் தமிழணங்கே'' என்பதில்— ''இருந்த'' என்றால் அது கடந்த காலத்தைக் குறிக்கிறதே, ''இருக்கும் தமிழணங்கே'' என்றல்லவா வேண்டும். ''இருந்த தமிழணங்கே'' என்று இருப்பது சரிதானா? என்று ஆராய்ச்சி சரிதான் என்று சிலரும், சரியல்ல என்று சிலரும் கருத்துக் களைக் கூறியிருக்கின்றார்கள்.

என்னைக் கேட்டால்—என்னை யாரும் கேட்க வில்லை— நான் சொல்லும் விளக்கம் இதுதான். மனோன்மணியம்

சுந்தரம் பிள்ளை அவர்களுக்கு அப்போது தமிழ்நாட்டின் எதிர்காலம் தெரிந்திருக்கின்றது (கைதட்டல்). எனவேதான் அன்றைக்கே பாடினார். எதிர்காலத்தில் பாடப் போகிறவன் ''எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெரும் தமிழணங்கே'' என்றுதான் பாடமுடியும். அவன் காலத்தில் எத்திசையும் புகழ் மணக்க தமிழ் இருக்காது, இருக்க இயலாது. எனவே அவன் ஆதங்கத்தோடு ''இருந்த பெரும் தமிழணங்கே'' என்றுதான் பாடுவான். கடந்த காலப் பெருமையைத் தான் அவனால் பாட முடியும். அவன் காலத்தில் தமிழ் எத்திசையும் புகழ் மணக்க இருந்திட இயலாது என்று தீர்க்கதரிசனத்தோடுதான் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை பாடியிருப்பார். எனவே இருந்த பெரும் தமிழணங்கே என்றே இருக்கட்டும், அதை இருக்கும் பெரும் தமிழணங்கே என்று மாற்றுகின்ற காலம் வரையிலே அதுவே இருக்கட்டும் என்றுதான் நான் சொல்லி யிருப்பேன்.

அதிலே இன்னொரு இடம், ''உன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே என்பதிலேகூடபுலவர் பெருமக்கள்செயல்மறந்து வாழ்த்துதுமே என்றுகூறியிருப்பது அவ்வளவு சரியல்ல. அதை மாற்றலாம். ஆனால் மாற்றும் போது திருத்தப்பட்டது என்று குறிப்பு போட வேண்டுமென்று நம்முடைய டாக்டர் சஞ்சீவி அவர்கள் கூடக் குறிப்பிட்டிருக் கின்றார்கள். அதிலே கூட என்னுடைய கருத்து—செயல் மறந்து வாழ்த்துதுமே என்று சுந்தரம் பிள்ளை ஏன் சொல்லி யிருப்பார் என்று எண்ணிப் பார்க்கின்றேன், தமிழன், தான் ஆற்ற வேண்டிய செயல்களையெல்லாம் மறந்துவிட்டான். சீரிளமைத்திறம் வியந்து, செயல் மறந்து அதை வாழ்த்திக் கொண்டிருக்கின்றோம், தமிழை வாழ்த்திக் கொண்டிருக்கின் றோமே அல்லாமல் நாம் தமிழுக்காகச் செய்ய வேண்டிய செயல் என்ன என்பதை மறந்துவிட்டு வாழ்த்திக் கொண்டிருக் கின்றோம் என்பதைத்தான் சுந்தரம் பிள்ளை நமக்கெல்லாம் அன்றைக்கே அறிவுறுத்தியிருக்கின்றார் என்றுதான் எண்ணி னேன்.

புலவர்களுடைய கருத்தரங்கிலே சொல்லப்பட்ட எண்ணங்கள் வேறாக இருந்தாலும்கூட நான் கவலையோடு தெரிவிக்கின்றேன். தமிழனின் சிறப்பு, புகழ் மணக்க இருந்த காலகட்டமெல்லாம் கடந்த காலமாக ஆகிவிட்டதும், இன்றைக்கு தமிழை நாம் வாழ்த்துகின்ற நேரத்தில் தமிழுக்கு ஒரு விழா எடுகின்ற நேரத்தில் அந்தத் தமிழை அரியாசனத்தில் அமர்த்த வேண்டிய அந்தச் செயலை மறந்துவிட்டுத் தான் வாழ்த்திக் கொண்டிருக்கின்றோம், எனவே செயல் மறந்து வாழ்த்திக் கொண்டிருக்கின்றோம் என்கிற தற்கால உண்மைகளையும் அறிந்து கொள்வதற்காகத்தான் இதை நான் குறிப்பிட்டேன்.

இன்றைய தமிழின் நிலை என்ன? தமிழனின் நிலை என்ன? நாளை மறுநாள் தமிழகமெங்கும் தமிழன் தன்னுடைய ஆறாத் துயரத்தைக் காட்டிக் கொள்ள உண்ணா நோன்பிலே ஈடுபட இருக்கின்றான். நான் இதை அரசியல் அடிப்படையில் பார்க்கவில்லை. தமிழ் இனம் என்ற அந்த கண்ணோட்டத்தோடுதான் பார்க்கிறேன். பக்கத்தில் இந்திய நாட்டின் கடற்கரையிலிருந்து இருபது கல் தொலைவிலே உள்ள இலங்கைத் தீவில் நம்முடைய இனத்தவன், நமது தமிழன்—தமிழச்சி, அங்கே தமிழ் பேசுகின்ற இஸ்லாமியர்கள் உட்பட அனைவரும் நம்முடைய இந்திய ராணுவத்தால் தாக்கப் படுகிறார்கள். இந்திய ராணுவத்தின் கொடுமைக்கு ஆளாக்கப்படுகின்றார்கள். அதை வானொலியும், தொலைக் காட்சியும் மறைக்கின்றன. அவர்கள் அழுகின்ற ஓலம் நம்முடைய காதுகளிலே கேட்கின்ற அளவில் தாய்த் தமிழ்நாடு இருக்கின்றது. அவர்களோ சில லட்சம் பேர் தமிழர்கள், ஆனால் அதைப் பார்த்து இங்கே கவலை மாத்திரம் தெரிவிக்கக் கூடிய நிலையில் இருக்கின்ற தமிழ் நாட்டு மக்கள் ஐந்து கோடிப் பேர். ஐந்து கோடிப் பேரால், இருபது லட்சம் தமிழர்களைக் காப்பாற்ற முடியாத அவலம் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றதென்றால் இதைவிட நமக்கு ஒரு வீழ்ச்சி வேறு என்ன வந்திருக்க முடியும் என்று கருதுகிறீர்கள்?

அந்த வீழ்ச்சியை தடுக்க வேண்டாமா? அழிந்து கொண் டிருக்கின்ற தமிழினத்தைக் காப்பாற்ற வேண்டாமா? அதற்கு நம்முடைய உணர்வுகளைக் காட்டவேண்டாமா?

அந்த உணர்வுகளைக் காட்ட வன்முறையில் ஈடுபட வேண்டுமென்று நான் சொல்ல மாட்டேன். தீய செயல்களில் ஈடுபட வேண்டுமென்று நான் கூற மாட்டேன். நம்மை நாமே அர்ப்பணித்துக் கொள்கின்ற அந்த போராட்டத்தில் ஈடுபட்டு தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வுகளை—உணர்த்த வேண் டியவர்களுக்கு உணர்த்த வேண்டாமா? அந்தக் கேள்விக்குப் பதிலாகத்தான் கடந்த காலத்திலே எத்தனையோ விதமான போராட்டங்கள்—கட்சிச் சார்பற்ற முறையிலே—தமிழ் நாட் டிலே உள்ள எல்லா மக்களும் கலந்து கொண்ட அறவழிப் போராட்டங்கள் தமிழகத்தில் நிரம்ப நடைபெற்றிருக்கின்றன. அதிலே ஒரு கட்டமாக— (20-2-88) அன்று தமிழகம் முழுவ தும் நடைபெறுகின்ற உண்ணா நோன்பில் தமிழ்ப் பெருங் குடி மக்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்ற அழைப்பை நான் விடுக்கக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

நாளை மறுநாள் நடைபெறுகின்ற உண்ணா நோன்பில் இன்று என் முன்னால் தென்படுகின்ற மானவ மணிகள் எத்தனை பேர் என்னோடு வந்து அமர்ந்திருக்கிறீர்கள் என்று நான் சுற்றிப் பார்ப்பேன். பல்லாயிரக்கணக்கில் ஆங்காங்கு நீங்கள் குழுமி அந்த ஒருநாள் உடலை வருத்திக் கொள்கின்ற அந்தச் செயலில் ஈடுபட்டால்—அங்கே பல நாள் பட்டினி கிடக்கிறானே, பல நாளாக படுகொலைக்கு ஆளாகி செத்துக் கொண்டிருக்கின்றானே, அந்தத் தமிழனை— தமிழச்சியை காட்பாற்றுவதற்கு நம்மாலான ஒருசிறு செயலைப் புரிந்தோம் என்ற மன நிம்மதி நமக்கு ஏற்படும். எனவே அதற்கெல்லாம் நீங்கள் வர வேண்டுமென்று உங்களை அழைக்கின்றேன்.

இலக்கிய விழாவில் இலக்கியத்தைப் போல தமிழ் இனத் திற்குத் தேவையான கருத்துக்களை எடுத்துக் கூறிவிட்டுச் சென்று விட்டானே என்ற குறை இருக்கக்கூடாதுஎன்பதற்காக

உமறுப் புலவருடைய ஆற்றலை அறிவுத் தெளிவை அவருடைய கவிப்புலமையை எடுத்துக் காட்டுகின்ற வகையில் சில சொல்ல நான் விரும்புகிறேன். உமறுப்புலவருடைய சீறாப்புராணம் சிறப்பு குறித்து நான் எடுத்துக் காட்டுகின்ற நேரத்தில் நான் உங்களிடத்தில் மூன்று வகையான ''மான்'' களைப் பற்றிச் சொல்ல விரும்புகின்றேன். திருச்சியிலே வழக்கறிஞர் சங்கத்திலே என்னை அழைத்துப்பேசச்சொன்னபோது மானினம் பற்றி இலக்கியக் கருத்து ஒன்றைக் சொன்னேன். அதை எப்படியோ தவறாகவோ, சரியாகவோ தமிழ் நாட்டு மக்கள் ஒரு அரசியல் கருத்தை உள்வைத்து நான் உரை யாற்றினேன் என்று ஏடுகளில் எல்லாம் வெளியிட்டார்கள். நான் அரசியல் கருத்தை உள்வைத்துப் பேசியதாக நான் அன்றைக்கும் கருதவில்லை. இன்றைக்கும் அப்படிச் சொல்ல வில்லை.

நான் சொன்னது—சங்க இலக்கியத்தில் பாலைக்கலியில் ஒரு ஆண் மான், ஒரு பெண்மான்; இரண்டையும் பற்றிக் குறிப்பிட்ட அந்தக் கவிதை வரிகளை எடுத்துக் காட்டினேன்.

''இன்னிழல் இன்மையால் வருந்திய மடப்பிணைக்கு தன்னிழலைக் கொடுத்தளிக்கும் கலை'' — பாலையில் வெம்மைக் கொடுமை தாங்க முடியாமல் இரண்டு மான்கள் தவிக்கின்றன நிழல் தேடி! ஆண் மான் ஒன்று, பெண் மான் ஒன்று. தேடித் தேடி அலைந்து நிழல் கிடைக்காத காரணத் தால், அந்த ஆண் மான், தானே அந்தக் கொடும் வெயிலில் நின்று கொண்டு தன்னுடைய நிழல் கீழே படுகிறது அல்லவா, அந்த நிழலில் பெண் மானைப் படுக்க வைத்துக் கொண்டது. என் நிழலில் நீ படுத்து இளைப்பாரு என்று ஆண் மான் தன் நிழலை பெண் மானுக்கு ஈந்தது என்று பாலைக்கலியில் வருகின்ற அந்தஇலக்கியச்சிறப்பை எடுத்துச் சொல்லி, அந்தக் காலத்து ஆண் மான்கள் இப்படி தன்னுடைய நிழலை பெண் மானுக்குத் தந்தது. இந்த காலத்து ஆண் மான்கள் பெண் மானின் நிழலை அல்லவா தேடிச் செல்கின்றன (கைதட்டல்) என்று குறிப்பிட்டேன்.

ஆக, பாலைக் கலியிலே வருகின்ற ஆண்மான், பெண் மானுக்கு நிழலை ஈந்தது அன்பின் சுரப்பு, காதலின் பெருக்கம் விலங்குகளாக இருந்தாலும் அவைகளின் உள்ளத்திலே மண்டிக்கிடந்த அந்தப் பாச உணர்வினுடைய அறிகுறி அது.

சீறாப் புராணத்தில் உமறுப் புலவர் ஒரு மானைக் காட்டுகிறார். காட்டில் நபிகள் நாயகம் நடந்து வருகிறார். ஒரு மான் வேடனால் துரத்தப்பட்டு ஓடி வருகிறது. அந்த மான் எப்படித்துரத்தப்பட்டது, என்றால்மான்கள் நிரம்பியஒரு கூட்டத்தில் ஆண் மான் ஒன்று, பெண் மான் ஒன்று. அந்த இரண்டு மான்களின் மூன்று நாளே நிறைந்த குட்டி மான் ஒன்று. வேடன் அந்த மூன்று மான்களையும் பிடிக்க துரத்து கிறான். கூட்டத்தோடு கூட்டமாக ஆண்மானும், குட்டி மானும் போய்விட பெண்மான் தனியாகச்சிக்கிக் கொள்கிறது. அதைக் துரத்துகிறான். பிடித்து விடுகிறான். பிடித்து இழுத்து வரும்போது நபிகள் நாயகம் எதிரே வருகிறார். பெண்மான் வேடனைப் பார்த்து "என்னை விட்டு விடு" என்று கெஞ்சு கிறது. "என்னைப் பிரிந்து ஆண்மான் ஆறாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும். அது மாத்திரமல்ல. மூன்று நாள் கூட நிரம்பாத குட்டி மானுக்கு நான் பால் கொடுக்க வேண்டும். வேடனே என்னை விட்டு விடு" என்று கெஞ்சுகிறது. "விட முடியாது" என்று வேடன் மறுக்கிறான். நபிகள் நாயகம் குறுக்கிடுகிறார். "உனக்கு இரக்கமே இல்லையா அப்பா? குட்டிக்கு பால் கொடுக்க வேண்டுமென்று அந்த மான் கெஞ்சுகிறதே, அதை விட்டு விடு" என்கிறார். வேடன் "முடியாது" என்கிறான்.

பிறகு சொல்கிறார் "அந்த மானை விடு," அதுபோய் மீண்டும் உன்னிடம் திரும்பி வந்து விடும், குட்டிக்கு பால் கொடுத்துவிட்டு வந்து விடும்" என்கிறார். வேடன் நம்ப மறுக்கிறான். "நீ நம்பவில்லை என்றால் அந்த மான் திரும்ப உன்னிடம் வருகின்ற வரை அதற்கு பிணையாக —ஜாமீனாக நான் உன் பக்கத்தில் இருக்கிறேன்" என்று நபிகள் நாயகம் சொல்கிறார்.

அதற்குப் பிறகு வேடன் அந்த மானை— ''நீ குட்டிக்குப் பால் கொடுத்துவிட்டு உடனே வந்துவிட வேண்டு'' மென்று நிபந்தனை விதித்து அனுப்புகிறான். அந்தப் பெண்மான் தனது குட்டியைத்தேடி ஓடுகிறது. ஓடுகின்ற நேரத்திலேயே குட்டிக்குப் பால் கொடுக்கப் போகிறோம் என்ற பாச உணர்வால் வழியெல்லாம் பால் பொங்கி வழிகின்றது. அது வெண்நிலவின் ஒளியைப் போல் இருக்கின்றது என்று உமறுப் புலவர் வர்ணிக்கின்றார்.

குட்டிக்குப்பால் கொடுத்து விட்டு பெண்மான் ஆண் மானி டம் விடைபெறுகிறது. ''நான் மீண்டும் வேடனிடம் செல்ல வேண்டும். எனக்காக நபிகள் நாயகம் அங்கே ஜாமீன் இருக்கிறார்'' என்று கூறுகின்றது. மற்ற மான்கள் எல்லாம் செல்ல வேண்டாமென்று தடுக்கின்றன. அப்பொழுது அந்தப் பெண்மான் ''நான் அளித்த உறுதிமொழியைகாப்பாற்றாமல் உயிரோடு வாழ்வதைவிட ஒரு புலியால் அடிக்கப்பட்டு செத்து விடுவது மேல்'' என்று கூறுகின்றது. அந்த அளவிற்கு அது நாணயமான மான் (கைதட்டல்).

முதலிலே சொன்ன மான் காதலைப் பொழிகின்ற மான் அன்பைப் பொழிகின்ற மான்—பாலைக்கலியிலே வந்தமான்.

இந்த மான் சீறாப்புராணத்தில் உமறுப்புலவர் சுட்டிக் காட்டுகின்றமான், நாணயமான மான். அதுவேடனிடம்திரும்பி வருகின்றது. வேடன் அந்த மானின் நாணயத்தைக் கண்டு 'நீ உயிரோடு இரு' என்று சொல்லி வாழ்த்தி அனுப்புகிறான். நபிகள்நாயகத்தையும்வணங்குகிறான் என்று அந்த புராணத் தின் அந்தக் கட்டம் முடிகிறது.

அடுத்து—இதிகாசத்திலே ஒரு மான். நான் முதலில் இலக்கிய மானைச் சொன்னேன். அடுத்து புராண மானைச் சொன்னேன். இதிகாசத்திலே ஒரு மான். நம்முடைய ஹமீது இங்கே சென்னாரே இதிகாசம்—ராமாயணம், அதிலே ஒரு

மான். அந்தமான், ராமச்சந்திர மூர்த்தியையும் ஏமாற்றுகின்ற மான் (சிரிப்பு) (கைதட்டல்) மாரீச மான் அது. அந்த மாரீச மானைக் கண்டு சீதை மயங்குகிறாள். அந்த மான் தனக்கு வேண்டும் என்று கேட்கிறாள். அது மாய மான் என்பதை உணராத ராமச்சந்திர மூர்த்தி துரத்திக் கொண்டு செல்கிறார். (கைதட்டல்) வெகு தூரம் சென்ற பிறகு அவர் வீசிய கணையால் அந்த மாரீச் மான் வீழ்கிறது. விழும்போது கூட சும்மா விழவில்லை. வேண்டு மென்றே 'லட்சுமணா! லட்சுமணா!' என்று உரக்கக் கூவிக் கொண்டே விழுகிறது. அப்படி லட்சுமணன் பெயரை உச்சரித்த காரணத்தால் ராமனுக்குத்தான் ஆபத்து ஏற்பட்டு விட்டதோ என்று ஜானகி பயந்து - (சிரிப்பு) - திருத்திக்கொள்க, சீதா தேவி பயந்து (சிரிப்பு) ராமாயணம் சொல்லிக் கொண்டிருக்கிறேன் (சிரிப்பு) ''நீ போயாவது அண்ணனைக் காப்பாற்று'' என்று இலட்சுமணனை அங்கே விரைந்து விரட்டி அனுப்புகிறாள். ஆக அங்கே வந்த மாரீச மான் - அதனுடைய மாயையிலே ராமன் மயங்கிவிட்ட காரணத்தால்-அதைப்புரிந்துகொள்ளாத காரணத்தால் சீதையையே பறிகொடுக்கவேண்டிய நிலைமை ராமாயணத்திலே ஏற்பட்டது.

மூன்று மான்களைக் கண்டீர்கள். ஒரு மான் காதல் பொழிந்த மான். தன், துணைவியிடம் அன்பைப் பொழிந்த மான். இலக்கிய மான்.

அடுத்தது, நாணயத்திற்கு பெயர் போன மான். சீறாப் புராணத்திலே வருகின்ற மான்.

மூன்றாவது மான் மாயமான், வஞ்சக மான். சூது, சூழ்ச்சி நிறைந்த மான் இதிகாசத்திலே வருகிற மான்.

மூன்று மான்களையும் ஒப்பிட்டுப் பாருங்கள். இதில் எந்த மான் பாராட்டத் தகுந்தது, புகழத் தகுந்தது என்ற தீர்ப்பை நீங்களே அளியுங்கள். தமிழுக்கு ஒருவிழா

எடுக்கிறோம் அல்லவா? தமிழும் விழுந்து விடாமல், தமிழனும் விழுந்துவிடமல் காப்பாற்ற வேண்டுமேயானால் நாணயமான மான்கள் தேவை (கைதட்டல்) தமிழினத்தின்பால் அன்பை பொழி கின்ற - பாசத்தைப் பொழிகின்ற மான்கள் தேவை வஞ்சக மான்கள், சூது மான்கள் தேவையில்லை, தமிழுக்கு விழா எடுகின்ற நேரத்தில் இந்தக் கருத்தை மனதில் பதிய வைத்துக் கொள்ளுங்கள்.

(சென்னை புதுக்கல்லூரியில் 18-2-88 அன்று நடை பெற்ற விழாவில் கலைஞர் ஆற்றிய உரை)

புது வெள்ளம்

புது வெள்ளம்

நல்ல மாலை நேரத்தில் வணிகக்கல்வி பயிலக் வளாகத் தில் குழுமியிருக்கின்ற உங்கள் அனைவரையும் சந்திப்பதில் நான் பேருவகை கொள்கிறேன். இந்த நிகழ்ச்சியில் தம்பி துரை முருகன் உரையாற்றிய போதும், ஆற்காடு வீராசாமி அவர்கள் உரையாற்றிய போதும் நான் சற்று கலக்கத்தோடு என்ன பேசி விடுவார்களோ என்ற அச்சத்தோடு அவர்களு டைய உரையை உன்னிப்டாக கவனித்துக் கொண்டிருந்தேன். எனக்காக அல்ல, முதல்வருக்காக! (கைதட்டல்), ஏனென் றால் சி. ஐ. டி. (C. I, T.) வளாகம் இது என்றாலும், சி.ஐ.டி (C.I.D.)கள் வந்திருக்கக் கூடும் (பலத்த கைதட்டல்). ஆனா லும் துரை முருகன் பேசியபோது குறிப்பிட்டதைப்போல. குருநாதர் அடியொட்டி விவேகானந்தர் நடைபோட்டதைப் போல, அண்ணா அவர்களின் அடியொட்டி நான் நடை போடுவதைப் போல, அவர்களும் அந்தப் பண்பாட்டினைப் பின்பற்றி அதிலிருந்து சிறிதும் பிறழாது தங்களுடைய உரையை இங்கே நிகழ்த்தியிருக்கிறார்கள்.

துரைமுருகன் பேசும்போது அரசியல் வெப்பத்தில் இருக் கினற நான் கோடையிலே இளைபபாற்றிக் கொள்ளும் குளிர் தருவாய், தரு நிழலாய், நிழல் கனிந்த சுகமாய் மாணவர் கள் இருக்கிறார்கள் என்ற காரணத்தால் மாணவர்கள் அழைத்த போதெல்லாம் ஓடி வருகிறேன் என்று குறிப்பிட் டார். கோடையிலே இளைப்பாறக் கிடைக்கின்ற குளிர் தரு வின் நிழலில் நிழலும் கிடைக்கும், சுகமும் கிடைக்கும், குளிர்ச் சியும் கிடைக்கும். ஆனால் நேரம் தவறி அமர்ந்தால் சில

நேரங்களில் நிழலுக்கு மேலே இருக்கின்ற மரங்களிலே உள்ள பறவைகளின் மூலம் கிடைக்கக் கூடாததெல்லாம் கூடக் கிடைக்கும். (கைதட்டல்) ஆனால் இங்கே நீங்கள்தான் மர நிழலிலே அமர்ந்திருக்கிறீர்கள். நான் பாதுகாப்பான பந்தலில் நின்றுகொண்டுதான் பேசிக் கொண்டிருக்கின்றேன்.

இந்த பயிலகத்தினுடைய மாணவர்கள் மாத்திரம் அல்லாமல்—வணிக்க் கல்வி பயிலுகிறவர்கள் மாத்திரம் அல்லாமல் அச்சுத்தொழில் நுட்பக் கல்வி பயிலுகிறவர்கள், தோல் தொழில் நுட்பக் கல்வி பயிலுகிறவர்கள், திரைப்படக் கலை நுட்பத்தைப் பயிலுகிறவர்கள், சமையல் சம்பந்தமான நுட்பத்தைப் பயிலுகிறவர்கள், இன்னோரன்ன கலையைப் பயிலுகிறவர்கள், என்று ஆயிரக்கணக்கான மாணவர்கள் இந்த நிகழ்ச்சியில் குழுமியிருக்கின்ற காட்சியைக் கண்டு நான் பேருவகை கொள்கின்றேன்.

எதிர்காலம் இளைஞர்கள் கையில் இருக்கிறது. குறிப்பாக மாணவர்கள் கரங்களிலே இருக்கின்றது. மாணவர்கள் திருப்பி கேட்கலாம்—நாங்கள் எங்கள் எதிர் காலத்தைப்பற்றி அல்லவா சிந்தித்துக் கொண்டிருக்கின்றோம், நீங்கள் நாட்டின் எதிர்காலம், சமுதாயத்தின் எதிர்காலம் எங்கள் கையில் இருக்கின்றது என்று சொல்கிறீர்களே—என்று கேட்கக்கூடும். அதற்கான வழிவகைகளில் எப்படி நீங்கள் கவனம் செலுத்தி கடமையாற்ற வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் நண்பர் வீராசாமி அவர்கள் இங்கே விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். வேலை வாய்ப்பு இன்றைக்கு இந்தியத் திருநாட்டில் ஒரு பூதாகரமான பிரச்சினை. அதிலேகூட நாம் தமிழில் ''வேலை வாய்ப்பு'' என்றுதான் சொல்கிறோம். அது கிடைத்து முடிகிறவரையிலேதான் அது வாய்ப்பாக இருக்க முடியும். கிடைத்து விட்டால் அது பணியாக ஆகிவிடுகின்றது. கிடைக்கிற வரையில் ''வேலை வாய்ப்பு'' என்ற சொற்றொடர் தான் அதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. வேலை வாய்ப்பு என்கிற சொற்றொடரைத் தமிழில் பயன்படுத்து

வதற்கு காரணமே-கோடிக் கணக்கான படித்த இளைஞர்கள் இன்றைக்கு இந்தப் பெரும் நாட்டில் வேலை இல்லாமல் அலைந்து கொண்டிருக்கின்ற சூழலை அகற்றுவதற்கு வாய்ப்புக் கூறுகளை உருவாக்க வேண்டும். அப்படி உருவாக்கக்கூடிய அந்தப் பொறுப்பை, தனியார்கள் மாத்திரம் நிறைவேற்ற இயலாது. அந்தப் பொறுப்பை நிறைவேற்ற வேண்டிய கடமை நாடாளும்அரசுக்கும் உண்டு. சற்றொப்ப நூற்பதாண்டு கரலமாக சுதந்திரத்தை நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். சுதந்தர நாட்டில் இன்னமும் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற மக்களின் தொகை ஐம்பது சதவிகிதத்திற்கு மேல் என்று வேதனையோடு நாம் இந்தசெய்தியை வெளியிடுகிறோம். படித்து பட்டம் பெற்று எந்தப் பணியும் கிடைக்காமல் அலைந்து கொண்டிருக்கின்ற வாலிபர்களுடைய எண்ணிக்கை லட்சோப லட்சம். நம்முடைய மகன் படித்தால், தம்பி படித்தால், தன்னுடைய குடும்பத்தைப் பாதுகாக்கின்ற ஒரு பாதுகாவலனாக, புரவலனாக எதிர்காலத்தில் இருப்பான் என்று எண்ணி அவர்களைப் படிக்க வைத்த பெற்றோர்கள் அல்லது உற்றார் உறவினர் இனறைய தினம் கண்ணீரும் கம்பலையுமாக கை பிசைந்து நிற்கின்ற காட்சியைத்தான் நாட்டில் பல இடங்களில் பரர்க்கின்றாம்.

வீராசாமி எடுத்துக் காட்டியதைப் போல் இந்த வணிகக் கல்வி பயிலகத்தில் அந்தக் குறை இல்லை. இங்கே படித்து தேறுகின்ற அனைவருக்கும் வேலை கிடைக்கின்றது என்று குறிப்பிட்டார். ஒரு அறைகூவல் கூட அவர் இங்கே விட்டார். இந்தப் படிப்புப் படித்த யாராவது வேலை இல்லை என்று சொன்னால் அவர்களுக்கு உடனடியாக அந்த வேலையை வாங்கித்தரத் தயார் என்று அவர் அறை கூவல் விட்டார். அரசியலில் இப்போதெல்லாம் சவால்கள் அதிகமாக விடப்படுகின்ற காலம். ஆனால் வீராசாமி அத்தகைய சவாலை விடாமல், வேலையில்லாமல் இருக்கின்றவர்களுக்கு வேலை வாங்கித் தருவேன் என்று சொன்னதற்குக் காரணம், இந்த

வணிகக் கல்விப் பயிற்சி பெற்றுத் தேறி விட்டால் நிச்சயமாக அவர்களுக்கு வேலை கிடைக்கும் என்பதால்தான். அதோடு இன்னொன்றையும் சொன்னார். மிகக் குறைவானவர்களே இந்தப் பயிலகத்தில் சேருகிறார்கள். ஏராளமானவர்கள் இந்தப் பயிலகத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டு மென்று சொன்னார். உங்கள் பயிலகத்தின் முதல்வர் திரு. கோபால கிருஷ்ணன் அவர்களிடத்திலே நான் உரை யாடிக் கொண்டிருந்தபோது, இப்படி ஒரு பயிலகம் இருப்பது கூட பலருக்கு இன்னமும் தெரியாமல் இருக்கின்றது என்று சொன்னார். நான் எண்ணுகின்றேன். இந்தப் பயிலகம் இருப் பது பல பேருக்குத் தெரிந்து, பலரும் இந்தப் பயிலகத்திற்கு வந்து பயிற்சி பெற்றுத் தேறி விடுவார்களேயானால் அந்த எண்ணிக்கை அதிகமாகின்ற நேரத்தில் இவ்வளவு சுலபமாக வீராசாமி சவால்விட முடியாது. ஏனென்றால் பயின்றவர் களுடைய எண்ணிக்கை அதிகமாகின்ற நேரத்தில் அவர் களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதும் அரிதாகக்கூடிய ஒரு சூழல் உருவாகியே தீரும். எனவேதான் இந்தியாவிலே ஒரு தலைகீழ், பொருளாதார மாற்றம் வந்தால் அல்லாமல், பெரும் உலக யுத்தத்தால் ஏற்பட்ட விழுப்புண்களையெல் லாம் ஆற்றிக் கொண்டு இன்றைக்கு உலகத்தில் விஞ்ஞானப் புதுமையைச் செய்து காட்டி, வளர்ச்சியுற்ற நாடுகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் நேரத்தில் யுத்தங்களால் அதிக மாகப் பாதிக்கப்படாமல் ஏதோ இரண்டொரு ஆக்கிரமிப்பு கள், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு, பங்களாதேஷ் சண்டை, சீன ஆக்கிரமிப்பு என்கிற இந்த இரண்டொரு ஆக்கிரமிப்புகள் — சொல்வார்களே, இடித்துக் கொண்டான் சிராய்த்து விட்டது என்று, அதைப் போல இந்தியாவிற்கு இந்த நாற்பதாண்டு காலத்தில் ஏற்பட்ட, இந்த இரண்டொரு சிராய்ப்புகள்- அதே நேரத்திலே நாடே அழிந்து விடடது என்று சொல்லக் கூடிய அளவிற்கு அணுகுண்டு வீச்சுக்கு இலக்கான ஜப்பான், ஜெர்மனி போன்ற நாடுகள் இன்றைக்கு தொழில் துறையில் முன்னேறி அங்கே வளர்ந்திருக்கின்ற தொழில்களுக்கு ஆட் கள் கிடைக்காமல் ஜெர்மானியர் இத்தாலியிலிருந்து ஆட்

களை அழைக்கின்றார்கள் என்ற அளவிற்கு அந்த நாடு முன்னேறியிருக்கின்றது. ஆனால் இந்தியத் திருநாட்டில் அத்தகைய சூழல் ஏற்படவில்லை என்பது கவலைக்குரிய ஒன்றுதான். பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் நம்மையெல் லாம் 21 ஆம் நூற்றாண்டுக்கு அழைத்துச் செல்வதாக வாக் களித்திருந்தார்கள். அதை நம்பி இந்திய நாட்டு மக்கள் அவருக்கு வாக்களித்திருக்கின்றார்கள். 21 ம் நூற்றாண் டுக்கு அழைத்துச் சென்றாலும், செல்லாவிட்டாலும், 21 ஆம் நூற்றாண்டு வந்தே தீரும். 20-ஆம் நூற்றாண்டு முடிந்த பிறகு, 21 ஆம் நூற்றாண்டு வந்து தான் தீர வேண்டும்.

ஆனால் அவர் எந்தப் பொருளில் சொன்னாரென்றால் ஒருபுதிய இந்தியாவை நிர்மாணிக்க முடியும்என்ற நம்பிக்கை யில் சொன்னார். ஆனால் போகிற போக்கைப் பார்த்தால் அப்படி ஒரு புதிய இந்தியா 21 ஆம் நூற்றாண்டு தொடக்கத் திலே உருவாகுமா என்கின்ற ஐயப்பாடு நமக்கெல்லாம் இன்றைக்கு எழுந்துள்ளது. ஆனால் அந்த ஐயப்பாட்டை எழுப்பி, ஒரு புதிய இந்தியாவை உருவாக்கவும், அந்தப் புதிய இந்தியாவிலே ஒரு புதிய தமிழகத்தை உருவாக்கவும் வல்லவர்கள், யார் என்றால் என் எதிரே அமர்ந்திருக்கின்ற இந்த இளைஞர் பட்டாளத்தால் தான் — இந்த வாலிப பட்டாளத்தால்தான் அது முடியும் என்று நான் நம்புகிறேன்.

இன்று நேற்றல்ல, நான் பல நேரங்களில் குறிப்பிடுவ தைப் போல இதிகாச காலத்திலேயிருந்து புராணக் காலத் திலேயிருந்து இளைஞர்கள்எதையும் சாதித்திருக்கின்றார்கள். நீங்கள் இதிகாசம் என்று எடுத்துக்கொண்டால், புராணம் என்று எடுத்துக்கொண்டால் இளைஞர்களுடைய வீரம், மன உறுதி, இவைகளைத்தான் மையப்படுத்தி அவைகள் நமக்குக் காட்டியிருக்கின்றன.

அபிமன்யு பற்றிய கதையை பாரதத்திலே படித்திருக்கின் றோம். அவன் இளைஞன். மணமான இளைஞன். அந்த

இளைஞன் பாரதப்போரில்மாண்டு விட்டான் என்றாலுங்கூட, அவனுடைய வீரம் மறைந்து விடவில்லை. காரணம் யாராலும் பிளக்க முடியாத சக்கர வியூகத்தைப் பிளந்தான். அர்ச்சுனனால் கூட பிளக்க முடியாத அந்த சக்கர வியூகத்தை அபிமன்யூ பிளந்தான், எனவே பாரதயுத்தத்திலே பீம னுடைய வீரம் பாராட்டப்பட்டாலும், பார்த்திபனுடைய வீரம் பாராட்டப்பட்டாலும், கர்ணனுடைய வீரம் பாராட்டப்பட்டா லும், அஸ்வத்தாமனுடைய வீரம் பாராட்டப்பட்டாலும், அனைவரையும்விட ஒருபடி மேலாக அந்த இளைஞன் அபி மன்யூவின் வீரம் பாராட்டப்படுகின்றது. கரம் இழந்தான், கரத்தை இழந்தபிறகு வாளை வாயிலிலே கவ்விக்கொண்டு போரிட்டான். இறுதியாக ஜெயபிரதன் என்ற சூழ்ச்சிக் காரன் பின்னால் இருந்து அவனைக் கொன்றான் என்பது கதை. ஆக இறுதி வரையில் வீரனாக இருந்து செத்தான் அபிமன்யூ. இது இளைஞர்களுடைய எழுச்சி. புராண காலத்திலே, இதிகாச காலத்திலே எப்படி இருந்தது என்ப தற்கு அடையாளம்.

அதைப் போலத்தான் இந்திரஜித்து; ராமாயணத்தில் ராவணனுடையமைந்தன்தான் இந்திரஜித்து. அவன்'வில்லன் சைடு' — 'கதாநாயகன் சைடு' அல்ல. ராமாயணக்கதையின் படி! அவனை வெல்ல முடியாமல் ராமனே தவித் தான், அவன் பொழிந்த கணைகளின் காரணமாக ராமனும், இலக்குவனும் அவனுடைய படை வீரர்களும் மயங்கி சரிந் தார்கள். அவனைத் தாக்குப் பிடிக்க முடியவில்லை. பின்னர் விபீஷணனுடையஉதவியால்தான் இறுதியாகஇந்திர ஜித்தைக் கொல்ல முடிந்தது என்று ராமாயணம் சொல்கிறது என்றால், அந்த இந்திரஜித்தும் ஒரு இளைஞன் தான்.

அபிமன்யூவைப் பெற்ற காண்படீன், அர்ச்சுனன்! அவனும் இளமைக் காலத்திலேதான் புகழ்க்கொடியை நாட்டினான், வயதான பிறகு அல்ல. அதுவும் மாணவ

னாக துரோணரிடத்திலே வில் பயின்றபோது, வில் வித்தை, வேல்வித்தை, குதிரையேற்றம் இப்படி பல போர்ப் பயிற்சி களை கௌரவர்களும், பாண்டவர்களும் துரோணாச்சாரி யாரிடம் பயின்றபோதுதான், அவனுடைய வீரமே விளங்கிற்று.

ஒரு முறை துரோணர், தன்னிடத்திலே பயிலுகின்ற மாணவர்களையெல்லாம் அழைத்து, ஒரு மரத்தைக் காட்டி அந்த மரத்திலே ஒரு கிளி அமர்ந்திருக்கின்றது, அந்தக் கிளியை நீங்கள் குறி பார்த்து அம்பை எய்து அதனுடைய கழுத்தை அறுக்க வேண்டும் என்று சொல்லி, துரியோதனை யும், மற்ற மாணவர்களையும் அழைத்து மரத்தையும் கிளியை யும் காட்டி என்ன தெரிகின்றது என்று ஒவ்வொருவராகக் கேட்டார். அத்தனை பேரும், மரம் தெரிகிறது கிளை தெரி கிறது, இலை தெரிகின்றது என்று சொன்னார்கள். அவர் களையெல்லாம் சரியில்லை என்று ஒதுக்கிவிட்டார். இளை ஞன் அர்ச்சுனனை அழைத்து, உனக்கு என்ன தெரிகிறது என்று கேட்டார். எனக்கு எதுவுமே தெரியவில்லை. அம்பின் நுனியும், கிளியின் தலையும்தான் தெரிகின்றது என்று சொன்னான். ஆக இலை தெரியக்கூடாது. கிளை தெரியக் கூடாது, எந்தக்கிளி வீழ்த்தப்பட வேண்டுமென்று காண்டீபன் கருதினானோ அந்தக் கிளியின் தலையும் அம்பின் நுனியும் தான் அவனுக்குத் தெரிந்தது. எனவே நீ தான் குறி பார்ப்பதில் வல்லவன். வெற்றி பெறக் கூடியவன் என்று துரோணர் தட்டிக் கொடுத்தார் என்று கதை கூறுகின்றது. இது அர்ச்சுனனுடைய இளமைக் காலத்தில்; ராமன்கூட பெரியவனான பிறகு பல வீரங்களை விளைவித்தான் என்றா லுங்கூட, அவன் இளைஞனாக இருந்தபோது தான் வில்லையே ஒடித்து, சீதா தேவியை மணம் புரிந்து கொண் டான் என்று இருக்கின்றது. இவைகள் எல்லாம் புராணக் கதைகள்.

நீங்கள் தமிழகத்தின் வரலாற்றிலே பார்ப்பீர்களேயா னால், கரிகால் பெருவளத்தான் தன்னுடைய கொலு மண்ட பத்தில் ஒரு சிக்கலான வழக்கிலே தீர்ப்புக் கூற வேண்டிய இளைஞன் அவன். அந்த நேரத்தில் அவனுக்குஒரு கட்டம்-

ஐயப்பாடு. இளைஞனாக இருந்து தீர்ப்பு கூறினால் அவையோர் நம்புவார்களா? வழக்காடுவோர்கள் நம்புவார்களா? என்ற ஐயப்பாட்டின் காரணமாக வயோதிகனைப் போல வேடமணிந்து வருகிறான். இந்தக் காலம் என்றால் வயோதிகர்கள் இளைஞர்களாக வேடமணிந்து வருவார்கள். ஆனால் அந்தக் காலத்தில் இளைஞன் வயோதிகனாக வருகிறான், தீர்ப்பு வழங்குகிறான்; தீர்ப்பு வழங்குகிறவன் கரிகாலன் என்று தெரியாது. ஒரு வயோதிக நீதிமான் என்று எண்ணிக்கொண்டு வழக்காடியவர்களும் அந்தத் தீர்ப்பை ஏற்றுக்கொண்டு சென்றார்கள். பிறகுதான் தெரிந்தது இளைஞன் கரிகாலன்தான் கிழவன் வேடத்திலே தீர்ப்பளித்தான் என்று. இது இளைஞன் வழங்கிய தீர்ப்பு.

பெரியவரான நெடுஞ்செழியன் வழங்கிய தீர்ப்பு எப்படி? வயதானவர்தான் நெடுஞ்செழியன் (கைதட்டல்), ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியனைச் சொல்லுகிறேன் (சிரிப்பு) சிலப்பதிகாரத்தில் - என்னை எங்கேயும் இழுத்துச் செல்ல விரும்பாதீர்கள், (சிரிப்பு) நீங்களும் எங்கேயும் போகாதீர்கள், வளாகத்திற்குள்ளேயே இருங்கள் (கைதட்டல்)— ஆராயாமல் தீர்ப்பளித்து கண்ணகியின் கோபத்திற்கு ஆளானான் (பலத்த சிரிப்பு). எனவே இளமைக் காலத்திலே அறிவு, ஆற்றல், ஆண்மை, வீரம், திறமை, நுண்மாண் நுழைபுலம்— அத்தனையும் கொண்டவர்களாக பலர் விளங்கி இருக்கிறார்கள்.

நம்முடைய காலத்தில் உத்தமர் காந்தியடிகள் முதுமைப் பருவத்தில் இந்தியாவின் விடுதலையைப் பெற்றுத் தருகின்ற அளவிற்கு தலைவராக விளங்கினாலும், அவருடைய இளமைப் பருவத்திலேயே தியாக வரலாறு படைத்தவர். தந்தை பெரியார் முதுமைக் காலத்திலே பகுத்தறிவுந் பழமாக திகழ்ந்தார் என்றாலும், இளமைக் காலத்திலே சுயமரியாதை வரலாற்றை உருவாக்கியவர். பேரறிஞர் அண்ணா 58 வது வயதிலே தமிழகத்தின் முதலமைச்சராக பொறுப்பேற்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டாலும் கூட, இளமைக் காலத்திலேயே அரும்பெரும் ஆற்றலாளராக விவளங்கினார்கள், இன்றைக்கு நான் உங்கள்

முன்னால் 64 வயது வாலிபனாக நின்றுகொண்டிருக்கின்றேன். (கை தட்டல்) வயோதிகனாக நின்று கொண்டிருக்கின்றேன் என்றே வைத்துக்கொள்ளுங்கள். இங்கேதம்பிதுரை முருகன்படித்துக்காட்டினாரே புறநானூற்றுப்பாடல், அதுநான் 1944ஆம்ஆண்டு, என்னுடைய இருபதாவது வயதிலே எழுதியடாடல் (கைதட்டல்). அவர் எழுதி வைத்துப் படித்தார். இப்போது என்னைக் கேட்டால் எழுதி வைத்துக் கொள்ளாமலே மனப்பாடமாக அதை நான் சொல்வேன், அவர் சொல்லிவிட்ட காரணத்தால் நான் சொல்ல விரும்பவில்லை.

கற்பனைகள் ஊறுவதும், கருத்துக்கள் ததும்புவதும், கடமையாற்றுகின்ற துணிவு ஏற்படுவதும் இளமையிலேதான். அந்த இளமையை நாம் பயன்படுத்திக் கொண்டாக வேண்டும். அந்த இளமையை விழலுக்கு இறைத்த நீராக நாம் ஆக்கிவிடக் கூடாது.

என்னுடைய வாழ்க்கையைப் பொறுத்தவரையில் நான் இந்தி எதிர்ப்புப்போராட்டத்தில் 38ஆம் ஆண்டு அடியெடுத்து வைத்த போது-அண்ணா நடத்திய திராவிட நாடு இதழுக்கு இளமைப் பலி என்ற கட்டுரையை எழுதி அண்ணா அவர்கள் அதனை வெளியிட்டு அடுத்தவாரம் அவர்திருவாரூருக்குவந்த போது, கருணாநிதி அவர்களை அழைத்து வாருங்கள் என்று சொல்ல—என்னை அழைத்துக்கொண்டு போய் அவர் எதிரே நிறுத்த—கருணாநிதி வரவில்லையா என்று அண்ணா கேட்க-''இவன் தான் கருணாநிதி'' என்று என்னுடைய உறவினர் ராமன் அண்ணாவிடம் சொல்ல— ''நான் என்னவோ பெரிய ஆளாகஇருப்பான்என்றல்லவா பார்த்தே'' என்று அண்ணா அவர்கள் அதிசயித்து என் முதுகிலே தட்டி 'ஒழுங்காகப் படி' என்று சொன்னார். அண்ணா சொல்லி, நான் கேட்காதது அது ஒன்றுதான். ஒழுங்காகப் படிக்கவில்லை. அதற்காக ஒழுங்காக படிக்காவிட்டால் நாமும் இப்படி தலைவராகி விடலாம் என்று நீங்கள் யாரும் கணக்கிடக் கூடாது. விதிவிலக்குகள் வழி காட்டிகளாக ஆகமாட்டா. இவைகள் எல்லாம் விதி

விலக்குகள். எனவே விதிவிலக்குகளை வழிகாட்டிகளாகக் கொள்ளக் கூடாது.

இந்தச் சமுதாயம் உங்களை நம்பியிருக்கின்றது. நம் முடைய மாணவர் தலைவர் வேல்முருகன் படித்த கவிதையில் நான் மனம் பறி கொடுத்தேன். தமிழ்ச் சமுதாயத்தின் உள்ளத் திலேஇன்றைக்கு கனன்று கொண்டிருக்கின்றவேகம், அவர்கள் கண்களிலே ததும்பிக் கொண்டிருக்கின்ற நீர்த் திவலைகள்— இதற்கெல்லாம் என்ன காரணம் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

இளைஞர்களை வரிசைப்படுத்திச் சொன்னேனே—அந்த இளைஞர்களின் வரிசையிலே தான் இன்றைக்கு ஏறத்தாழ முப்பதுலட்சம்மக்களுடைய விடுதலைக்காக ஒரு சின்னஞ்சிறிய தீவில் இராண்டாயிரம் வீரர்களை மட்டும் தன்னகத்தே வைத்துக் கொண்டு, ஒரு லட்சம் இந்தியத் துருப்புகளை எதிர் கொள்கிறான் பிரபாகரன் என்றால் அவன் இளைஞன், (கைதட்டல்) அவன் வாழவேண்டுமென்று விரும்புகிறோம்.

அவன் சாகக் கூடாது என்று தமிழ்த் தாய் கதறி அழுகு கொண்டிருக்கின்றாள். தமிழ்ச் சமுதாயமே இன்றைக்து தென்னிலங்கைத் தீவை நோக்கி தன்னுடைய விழிகளை அகல விரித்துக்கொண்டிருக்கின்றது.தன்னுடைய காதுகளை மடக்கி என்ன செய்தி வருமோ என்று கேட்டுக் கொண்டிருக்கின்றது, அவர்களையெல்லாம் காப்பாற்றவேண்டுமானால், அந்த இனத்தைக் காப்பாற்ற வேண்டுமேயானால்—இருபது கல் தொலைவிலே உள்ள இலங்கைத்தீவிலே இருக்கின்ற இனத்தை மாத்திரமல்ல, இங்கே இந்த இனம் அறிவு பெற்ற இனமாக, அரசியல் விழிப்புற்ற இனமாக, கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்றில்லாமல் கருத்துப் பொதிந்த இனமாக வாழவேண்டுமேயானால், நான் நம்பியிருப்பது என்னைப்போன்ற வயதானவர்களை அல்ல. எங்களுக்குப் பிறகு இந்தச் சமுதாயத்தின் வாரிசாக வரவிருக்கின்ற உங்களைத்தான் நான் நம்பி இருக்கின்றேன் என்று திடமாகச் சொல்கிறேன். எனக்கு நம்பிக்கை இருக்கின்றது;

இன்றில்லாவிட்டால் நாளை-நாளை தவறினால் மறுநாள்— இல்லை, நிச்சயமாக ஒருநாள் இந்த இனம் விழிப்புறும். அப்படி இந்த இனத்தை விழிப்புறச்செய்கின்ற வல்லமையும், வாய்மையும், வாலிபர்களாகிய — மாணவர்களாகிய உங்களுடைய கரங்களில் இருக்கின்றது என்று நான் நம்புகின்றேன்.

நாமென்ன, இந்தச்சமுதாயத்திற்கு வரலாறு பெறாதவர் களா? நம்முடைய வரலாற்றுப் புத்தகம்தானே, சேரன் செங்குட்டுவன் இமயம் வரையிலே சென்றான். குயிலாலு வத்திலே கனகவிஜயரை வென்றான், அவர்கள் தலையிலே கல்லை ஏற்றினான். கண்ணகிக்கு சிலை வடித்தான் என்று கூறுகிறது. நம்முடைய வரலாறு தானே சோழமன்னன் ராஜேந்திரன், ராஜ ராஜ சோழன் ஆகியோருடை கடற்படை எல்லாம் கடாரம்வரை சென்றது வென்றது என்கின்ற செய்தி களைத் தருகிறது. நம்முடைய வரலாறு தானே, ஒரு காலத் திலே இலங்கைத்தரணியைக்கூட சோழ மன்னன் வென்றான் என்கிற அந்த வீரகாவியத்தைப் பாடுகின்றது. வரலாறு மாத் திரமா? இலக்கியம் இல்லாதவர்களா? நம்முடைய இலக்கியத் திற்கு ஈடான இலக்கியம் உலகத்திலே எந்த மொழியிலும் தோன்றவில்லை என்றஅளவிற்கு இலக்கியப்பெருமை நமக்கு உண்டு. அந்த இலக்கியப் பெருமையை எல்லாம் தம்பி துரை முருகன் இங்கே எடுத்துக்காட்டினார்.

நாமென்ன விஞ்ஞானத்திலே குருடர்களா? ஆனால் இன் றைக்கு விஞ்ஞான விழிப்பு பெறாதவர்களாக இருக்கலாம். நம்முடைய பழைய நூல் சீவக சிந்தாமணி அன்றைக்கே மயில் பொறி அமைத்து, ஆகயத்திலே பறந்தான் என்கிற செய்தியை நமக்குச் சொல்கின்ற பழம் பெரும் புத்தகத்தோடு போய்விட்டது. மேல் நாட்டுக்காரன் புத்தகத்திலே தெரிந்து கொண்டதைச் செயல்படுத்தத் தொடங்கினான். நாம் செயல் படுத்த தொடங்கவில்லை. எனவே வரலாறு அற்றவர்கள் அல்ல நாம். இலக்கியச் செறிவு அற்றவர்கள் அல்ல நாம்

நிலநூல் ஆய்வு தெரியாதவர்கள் அல்ல நாம். விஞ்ஞான வித்தகம் புரியாதவர்கள் அல்ல நாம். எல்லாம் இருக்கிறது. ஆனால் எதுவும் இல்லை என்ற நிலையிலே உள்ளவர்கள் நாம். எல்லாம் இருக்கிறது. எல்லாம் உண்டு, எல்லாம் ஏற்படும் என்கின்ற அந்த மன உறுதியோடு நாம் பணியாற்ற வேண்டும். முன்னேற வேண்டும். அப்படிப்பட்ட முன்னேற்றத்தை உருவாக்கக் கூடிய முழு நிலாக்களாக— கதிர்களாக—எழில் ஞாயிறுகளாக இருக்கின்ற மாணவச் செல்வங்களே! உங்கள் அனைவரையும் வாழ்த்தி—நீங்கள் வாழ்க—வெல்க—இந்தச் சமுதாயத்தை உருவாக்குக.

(சென்னை மாநில வணிகக் கல்விப் பயிலகத்தில்
21-3-88 அன்று தலைவர் கலைஞர் ஆற்றிய உரை)

திரு. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வுத் நூல்
நிலையம்
சென்னை-18

சமுதாயமும்- அரசியலும்

சமுதாயமும் - அரசியலும்

கடந்த கிழமை சென்னையில் உள்ள சி. ஐ. டி வணிகக் கல்வி பயிலகத்தில் ஒரு விழா ஏற்பாடு செய்யப்பட்டு நான், வீராசாமி, துரைமுருகன் ஆகியோர் சென்றிருந்தோம். அங்கே விழாவை ஏற்பாடு செய்த மாணவர்களும், கல்லூரி முதல்வரும் கலந்தாலோசித்து இது போன்ற மண்டபத்திற்குள் விழாவை நடத்தினால் கூட்ட நெரிசல் அதிகமாக இருக்கும் என்பதை முன் கூட்டியே எண்ணிப் பார்த்து அந்தப் பயிலகத்தின் திறந்தவெளி மைதானத்தில் அந்த நிகழ்ச்சியை நடத்தினார் கள். அதிலே நீண்ட நேரம் பல கருத்துக்களை எடுத்துக் கூறக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அமைதியான முறையில் அந்த நிகழ்ச்சி, மிகுந்த எழுச்சியோடு நடை பெற்றது.

இங்கே நந்தனம் கல்லூரியில் உள்ளவர்களுக்கு இதயம் பெரிது. ஆனால் இடம் சிறிது. அந்தப் பெரிய இடத்தில் இந்த இடம் சிறியதாயிற்றே என்பதை அவர்கள் எண்ணிப் பார்க்க என்ன காரணத்தாலோ இயலவில்லை. பெரிய இதயம் அல்லவா? அதனால் சிறிய இடத்தைப்பற்றி எண்ணிப்பார்க்க தவறி விட்டீர்கள். எண்ணிப் பார்த்திருப்பீர்களேயானால். கீழேயுள்ள மைதானத்தில் இந்த நிகழ்ச்சியை நீங்கள் ஏற்பாடு செய்திருந்தால் உங்களுக்கும் சங்கடம் இல்லை. எங்களுக்கும் சங்கடம் இல்லை. கிட்டத்தட்ட இந்த நாட்டிலே நெருக்கடி நிலை வருமா என்று அஞ்சிக் கொண்டிருக்கின்ற நேரத்தில்— இங்கே ஒரு பெரும் நெருக்கடியை இப்பொழுதே ஒரு ''முன் மாதிரியாக'' சந்திக்கின்ற வாய்ப்பு எனக்கும் உங்களுக்கும் கிட்டியிருக்கின்றது.

இங்கே அநேகமாக நாமெல்லாம் வியர்வையிலே குளித்துக் கொண்டிருக்கின்றோம். வியர்வையிலே குளித்துக்கொண்டிருக்கின்றோம் என்பதைவிட வியர்வையிலே நீச்சலடித்துக் கொண்டிருக்கின்றோம். வியர்வை என்பது உழைப்பவர்களுக்கு உரியது. புழுக்கத்திலே இருப்பவர்களுக்கும் உரியது என்பதற்கு இது எடுத்துக்காட்டு. நாமெல்லாம் இப்போது புழுக்கத்திலே இருக்கின்றோம். எத்தனையோ புழுக்கம். இடப்புழுக்கம் மாத்திரமல்ல, மனப்புழுக்கமும் கூட.

பெரியார் படத்தை இங்கு நான் திறந்து வைத்துள்ளேன். அவருடைய பெயர் தினமணி பத்திரிகையிலே வந்த டெல்லி செய்தியில் இருட்டடிப்பு செய்யப்பட்டிருக்கின்றது என்று துரைமுருகன் இங்கே குறிப்பிட்டார்.

வேதாரண்யத்தில் நடைபெற்ற உப்புச் சத்தியாகிரகம்— மூதறிஞர் ராஜாஜி அவர்கள் முன்நின்று நடத்தியது—சர்தார் வேதரத்னம் பிள்ளை முன் நின்று நடத்தியது — இது பற்றியெல்லாம் தினமணியிலே குறிப்பிட்டிருக்கின்றார்கள். ஆனால் அதே தினமணியில் வைக்கம் போராட்டம் பற்றிக் குறிப்பிடும் போது, பெரியாரின் பெயர் ஏன் விடப்பட்டு விட்டது என்றால் அவர் தமிழ் மக்களுக்காக — தமிழ்நாட்டு மக்களுக்காக பாடுபட்டவர் — சுயமரியாதை இயக்கம் கண்டவர் என்பவைகள் மாத்திரமல்ல. ராஜாஜியோ, வேதரத்னம் பிள்ளையோ செய்யாத அளவிற்கு தமிழ் நாட்டிலே ஆதிக்க சக்திகளின் பிடரியைப் பிடித்து ஆட்டியவர் பெரியார் என்பதை சிலர் மறந்துவிட்டாலும், தினமணி பத்திரிக்கையைப் போன்ற பத்திரிகையாளர்கள் இன்னமும் மறக்காமல் இருக்கிறார்கள். எனவேதான் வைக்கம் போராட்டம் பற்றி எழுதுகின்ற நேரத்தில் வேதாரண்யம் போராட்டம் பற்றி குறிப்பிட்டிருக்கின்ற அதே தினமணி பத்திரிக்கையில் தந்தை பெரியாரின் பெயர் விடப்பட்டிருக்கின்றது. ஆனால் ஒன்று—வரலாற்றை மறைத்துவிட முடியாது. இந்திய நாட்டு வரலாற்றில், குறிப்பாக தென்னகத்து வரலாற்றில் வைக்கம் போராட்டம்

மிக புகழ்வாய்ந்த ஒரு தியாகப் போராட்டம். அந்தப் போராட்டத்தை — முதலில் அங்கு ஒடுக்கப்பட்டுக் கிடந்த அடக்கப்பட்டுக் கிடந்த தீண்டத் தகாதவர்கள் என்று விலக்கப் பட்டு, புறக்கணிக்கப்பட்டுக் கிடந்த மக்கள் தொடங்கி நடத்தி னார்கள். அப்போது எல்லாம் தந்தை பெரியார் காங்கிரஸ் இயக்கத்திலே இருக்கிறார். அந்த நேரத்தில் அந்தப் போராட்டத்தில் அவர்களால் வெற்றி அடையாமல் போய், ஈரோட்டில் இருந்த தந்தை பெரியார் அவர்கள் வைக்கம் சென்று அந்தப் போராட்டத்திற்கு தலைமை தாங்கி நடத்தி னார். தம்பி துரைமுருகள் குறிப்பிட்டதைப்போல ஆலயத்திற் குள்ளே செல்லுகின்ற போராட்டம் மாத்திரமல்ல. உயர்சாதி மக்கள் வாழ்கின்ற தெரு வழியாகக்கூட தீண்டத் தகாதவர்கள் என்று கருதப்படுகின்ற மக்கள் நடமாடக்கூடாது என்ற நிலையை மாற்ற. அந்தத் தெருவிலே எந்த மனிதர்களும் நடக்கலாம். ஆண்டவன் உலகத்திலே உள்ள உயிர்கள் அனைத்தையும் படைத்தவன் என்பது உண்மையானால், அவன் இப்படி நாலுசாதி, நானூறுசாதி என்று படைக்க வில்லை, எல்லா மனிதர்களும் சமம்தான், அனைவரும் ஆண்டவனின் பிள்ளைகள் தான் என்பது உண்மையானால், அந்தத் தெருக்களில் இன்னார் நடக்கலாம். இன்னார் நடக்கக் கூடாது என்ற பேதத்தை ஒழித்துக் கட்டியே தீருவேன் என்று பெரியார் அவர்கள் அந்தப் போருக்கு தளபதியாக—தலைவ ராகப் பொறுப்பேற்றார். அப்போது அவரை திருவாங்கூர் அரசு, சிறைச்சாலையிலே பூட்டி மகிழ்ந்தது. அது மாத்திர மல்ல, தந்தை பெரியாருக்கு விளைவிக்கப்பட்ட இடையூறுகள் கொஞ்ச நஞ்சமல்ல.

இன்னமும், பெரியார் எந்தவொரு குறிக்கோளுக்காகப் போரிட்டாரோ, அந்த குறிக்கோளில் நாமனைவரும் முழுமை யாக வெற்றி பெற்றுவிடவில்லை. வைக்கத்திலே, குறிப்பிடப் பட்ட அந்தத் தெருவிலே எல்லோரும் நடமாடலாம். ஆலயங் களில் அனைவரும் சென்று ஆண்டவனைத் தரிசிக்கலாம், பூஜிக்கலாம் என்றெல்லாம் ஏட்டளவில்தான் இன்று காரியங் கள் இருக்கின்றதே அல்லாமல் செயல் அளவில் இன்றைக்கு

இந்தியா முழுமையும் அந்தக்கார்ரியங்கள் நடைபெறவில்லை. ஒரு சமுதாயத்தில் விழிப்புஉணர்வு ஏற்பட்டால்தான், அந்தச் சமுதாயத்தில் ஏற்படுகின்ற வளம்தான், மறுமலர்ச்சிதான் எத்தகைய அரசியல் விழிப்பையும் நிலைநிறுத்தக் கூடியது. அரசியல் தெளிவை ஏற்படுத்தக் கூடியது. சமுதாயம் சீர்படுத்தப்படாமல் அரசியலில் பெரும் வெற்றிகளைப் பெற்றுவிட முடியாது. அந்தக் காரணத்தால்தான் நாங்கள் எல்லாம் இளமைப் பருவத்திலே பெரியார் அவர்களுடைய பாதையிலே நடைபயிலத் தொடங்கினோம். பெரியார் அவர்களுடைய இயக்கத்தில் என்னை நான் ஒப்படைக்கக் கொண்டது என்னுடைய 13 வது வயதில். 1924 ஆம் ஆண்டு பிறந்தநான், 1937 ஆம் ஆண்டு தந்தை பெரியார் அவர்களுடைய உரையை திருவாரூரில் கேட்ட அந்த கால கட்டத்திலேயே பெரியாருடைய உரை—அந்த உரையிலேஎடுத்துச் சொல்லப்பட்ட உண்மைகள்—அவர் வைத்த வாதங்கள், இவைகள் எல்லாம் என்னைப் போன்ற இளைஞர்களை அந்தக் காலத்திலே கவர்ந்த காரணத்தினால்தான், நாங்கள் எல்லாம் தந்தை பெரியார் அவர்களுடைய இயக்கத்திலே அன்றைக்கே எங்களை ஒப்படைத்துக்கொண்டோம்.

அதற்குப் பிறகு ஏறத்தாழ இந்த ஐம்பதாண்டு கால பொது வாழ்க்கையில் பெரியாருடைய எண்ணங்களை அவருடைய கருத்துக்களை உள்ளத்திலே பதிய வைத்துக் கொண்டு, நாங்கள் தமிழகத்தில் எங்களுடைய அரசியல் பணிகளை நடத்திக் கொண்டிருக்கின்றோம்.

பெரியாருடைய முதல் மாணவனாகதமிழ்ச் சமுதாயத்தின் எழு ஞாயிறாக விளங்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் தந்தை பெரியாருடைய சமுதாயக் கொள்கைகளுக்கு மேலும் மெருகு தீட்டி, மேலும் ஒளி உமிழச் செய்கின்ற பணிகளை ஆற்றி அரசியல் நீதியாகவும் அந்தக்கொள்கைகளைச் செயல் படுத்த வேண்டுமென்று எண்ணம்கொண்டுதான் ஒரு அரசியல் இயக்கத்தை 1949 ஆம் ஆண்டு தொடங்கினார்கள். அப்படி தொடங்கப்பட்ட அந்த இயக்கத்தின் சார்பில் அவர் பெற்ற

அரசியல் வெற்றியாக அண்ணா அவர்களே 1967 ஆம் ஆண்டு முதலமைச்சராகப் பொறுப்பேற்று, தமிழகத்தின் அரசு பரிபாலனத்தை கையிலே எடுத்தார்கள். சமுதாயக் கொள்கைகள் உள்ளத்திலே மண்டிக் கிடந்த காரணத்தால்—பதிந்துகிடந்த காரணத்தால்தான் அவர்கள் அந்தப் பொறுப்பேற்றவுடனே-பதினெட்டு, இருபதாண்டு காலம் ஒருவரோடு ஒருவர் பேச முடியாத அளவிற்கு—சந்திக்க முடியாத அளவிற்கு இருந்த சூழ் நிலைகளையெல்லாம் அண்ணா அவர்கள் மாற்றிக் கொண்டு, தேர்தலில் தன்னை எதிர்த்து தந்தை பெரியார் பிரச்சாரம் செய்தார் என்றாலும் கூட—நாமெல்லாம் அவர் வழி வந்தவர்கள், அவருடைய கொள்கை அடிப்படையிலே வளர்ந்தவர்கள்—என்ற காரணத்தால் முதலமைச்சராகப் பொறுப்பேற்று கோட்டைக்குச் செல்வதற்கு முன்பாக அண்ணா அவர்களும் நானும் நம்முடைய நாவலர் அவர்களும்—மூவருமாக திருச்சிக்குச் சென்று, அங்கேயிருந்த அன்பில் அவர்களோடு தந்தை பெரியாரைச் சந்தித்து, அவருடைய வாழ்த்துக்களைப் பெற்று, அதற்குப் பிறகுதான் கோட்டைக்குள்ளே அடியெடுத்து வைத்தோம், அப்படி அடியெடுத்து வைத்தோம். அப்படி அடியெடுத்து வைத்த அண்ணா அவர்கள் என்ன செய்தார்கள்?

ஏந்தக் கொர்ள்கைகளை பெரியார் அவாகள் சமுதாய நீதியில் பரப்பி வந்தார்களோ, அந்தக் கொள்கைகளுக்கெல்லாம் அரசியல் நீதியாக சட்ட நீதியாக—அங்கீகாரம் தர வேண்டும் என்ற அந்த எண்ணத்தோடு அவைகளை உருவாக்கி—அவைகளையெல்லாம் நாட்டு மக்கள் உள்ளத்தில் பதிய வைத்து நடைமுறைக்குக் கொண்டு வந்தார்கள், அவைகள் எவையெவை?

பெரியார் தமிழ்ச் சமுதாயத்தில் பகுத்தறிவு ஒளி பரவ வேண்டும் என்பதற்காக சுயமரியாதைத் திருமணத்தை அறிமுகப்படுத்தியவர். அப்படிப்பட்ட திருமணங்களில் தமிழ் கொழித்தது, செழித்தது, சிரித்தது. அதற்கு முன்பெல்லாம் தமிழ் இருந்த இடம் தெரியாமல் இருந்தது. அப்படி ஒருதமிழ் மண முறையை சுயமரியாதை மணமுறை என்ற பெயரால்

பெரியார் அறிமுகம் செய்தார். அதிலே என்ன ஒரு சங்கடம் என்றால் சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டவர்கள் சட்ட ரீதியாக அதாவது அந்தக் குடும்பத்திலே தகராறு ஏற் பட்டால் தங்களுடைய குழந்தைகளுக்கான உரிமைகளைப் பெற முடியாது. சட்ட ரீதியாக அந்தக் கணவனும் மனைவி யும் சில நேரங்களில் தங்களுக்குள் ஏற்படும் தகராறுகளைத் தீர்த்துக் கொள்ள முடியாது. அவர்கள் ஒரு வேளை அந்தச் சுயமரியாதை திருமணங்களின் அடிப்படையில் விவாகரத்து போன்ற அனுமதி பெற்ற காரியங்களைக்கூட செய்து கொள்ள இயலாது. மனைவியை கணவன் கைவிட்டுவிட்டால் அந்த மனைவி கணவனிடமிருந்து ஜீவனாம்சம் பெற முடி யாது. இவைகள் எல்லாம் சுயமரியாதைத் திருமணத்தின் காரணமாக ஏற்கெனவே இருந்தசங்கடங்கள். இதைப்போக்க காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் சட்ட மன்றத்திலே நாங்கள் எல்லாம் தீர்மானங்கள் கொண்டு வந்து, பெரியார் அறிமுகம் செய்த சுயமரியாதைத் திருமணங்கள் சட்டரீதியாக ஆக்கப் பட வேண்டுமென்று பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காலத்திலேகூட கேட்டோம். இன்னும் கூட சிலவற்றை ஞாபகப்படுத்திக் கேட்டோம். பெரியார் அவர்கள் இப்போது காமராஜரின் காங்கிரசை ஆதரித்து பிரச்சாரம் செய்து வருகி றார். அதற்குப் பிரதி உபகாரமாகவாவது பெரியாரின் சுய மரியாதைக் கொள்கைக்கு நீங்கள் தருகின்ற மதிப்பின் அடையாளமாக சுயமரியாதைத் திருமணத்தை சட்டப்படி செல்லுபடியாக்குங்கள் என்ற சட்ட மன்றத்திலேயே தீர்மா னங்களையும் தனிநபர் மசோதாக்களையும் கொண்டு போனோம். ஆனால் அந்த ஆட்சியிலே எந்த முதலமைச்சரும் அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற வுடன் சட்டமன்றத்தில் சுயமரியாதைத் திருமணங்கள் – இனி மேல் நடைபெறுகின்ற திருமணங்கள் மாத்திரமல்ல, இது வரையில் நடைபெற்றிருக்கின்ற எல்லா சுயமரியாதை திரு மணங்களும் சட்டப்படி செல்லுபடியாகும் என்ற ஒரு தீர்மா

னத்தை அண்ணா அவர்கள் கொண்டு வந்து சட்டம் ஆக்கினார். அப்போதுகாங்கிரஸ்கட்சியின் தலைவர்—எதிர்க்கட்சித் தலைவர்— ''இந்த தீர்மானம்—இந்தச் சட்டம் நீங்கள் பெரியாருக்குத் தருகின்ற காணிக்கையா?'' என்று கேட்டார். அப்போது அண்ணா அவர்கள் எழுந்து, ''இந்தச் சட்டம் மாத்திரமல்ல. இந்த அமைச்சரவையே பெரியாருக்காக தரப்படுகின்ற காணிக்கைதான்'' என்று சொன்னார்கள். ஆக ஒரு குடும்ப வாழ்க்கையில் அறிவுஒளி எப்படிப்புக வேண்டும் என்பதற்காக அவர்கள் அறிமுகப்படுத்திய அந்தத் திருமண முறைக்கு அண்ணா சட்ட வடிவம் தந்தார். அரசியலில் அடியெடுத்து வைத்த காரணத்தால், அரசைக் கைப்பற்றிய காரணத்தால் சமுதாயக் கொள்கைகளை செயல்படுத்த முடிந்தது அண்ணா அவர்களால்.

அதைப்போலவே மொழிப் பிரச்சினையில் பெரியாரின் கொள்கை—இந்தித் திணிப்பு கூடாது என்பதாகும். இந்தி ஆதிக்கம் தமிழகத்தில் அடியெடுத்து வைக்கக்கூடாது என்பதாகும். 1938ஆம் ஆண்டு பெரியாரும் மறைமலை அடிகளாரும், சோமசுந்தர பாரதியாரும், அண்ணாவும், பாரதிதாசனும் இவர்கள் எல்லாம் அன்று ஒன்றுகூடி ஆதிக்க இந்தியை எதிர்த்த அந்த காலக்கட்டம், அந்தக் காலம் நான் பொது வாழ்க்கையிலே அடியெடுத்து வைத்த காலமும் ஆகும். அந்த இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்று, ஆயிரக்கணக்கானோர் சிறைப்பட்டு, தமிழுக்காக முதல் முதலாக சிறைச்சாலையிலே செத்து தாளமுத்து, நடராஜன் என்ற இளைஞர்கள், கல்லறைகளாக மாறினார்கள். தமிழ் மொழியின் வரலாற்றில் அந்த இரண்டு கல்லறைகளை யாரும் மறைத்து விட முடியாது. அதற்குப் பிறகு தொடர்ந்து நடைபெற்ற அந்தப் போராட்டத்தில் பலமுறை நாம் சிறை சென்றிருக்கின்றோம். பல்லாயிரக் கணக்கானோர் சிறை சென்றிருக்கின்றோம். பெரும் பெரும் எதிர்ப்புக்களையெல்லாம் சந்தித்திருக்கின்றோம். தீக்குளித்து, இந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்பலபேர், இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து மாண்டு போயிருக்கிறார்கள். இவைகளுக்கெல்லாம் பிறகு அண்ணா ஆட்சிப்

பொறுப்பை யேற்றவுடன் சட்ட மன்றத்திலேயே ஆணை பிறந்பித்தார்கள். என்னதான் மத்திய சர்க்கார் இங்கே இந்தியை திணித்தாலும் கூட—இங்கே இந்த ஆட்சியில் அதற்கு இடம் தர மாட்டோம். இனிமேல் தமிழ் நாட்டுப்பள்ளி களில் தமிழ், ஆங்கிலம் என்ற இரண்டு மொழிக்குத்தான் இடம், இந்திக்கு இடம் இல்லை என்று மத்திய அரசின் மும் மொழித் திட்டத்தை அன்றைக்கு சம்மட்டி அடி கொடுத்து விரட்டினார் என்றால், அது தந்தை பெரியார் அவர்களின் அழுத்தமான கொள்கைக்கு அண்ணா அவர்கள் அளித்த அரசியல் முத்திரை என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது.

அதைப் போலத்தான் தமிழ்நாட்டு மக்கள் அத்தனை பேரும்—பெரியார் உள்ளிட்ட அத்தனை பேரும்—சென்னை ராஜ்யம் என்று இருந்த பெயரை தமிழ்நாடு என்று மாற்ற வேண்டுமென்று போரிட்டார்கள். பெரியார் பலமுறை அதற் காக குரல் எழுப்பினார். பெரியார் மாத்திரமல்ல. காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்த சில பேர்கூட—குறிப்பாகவிருதுநகரில் சங்கரலிங்க நாடார்—பழுத்த காங்கிரஸ்காரர்—உண்ணா விரதமே இருந்தார்—உண்ணா விரதம் இருந்து உயிரையே விட்டார்! அப்போது காங்கிரஸ் கட்சியின் முதலமைச்சர்கள் தான் இங்கே இருந்தார்கள். அண்ணா அவர்கள் கூட சங்கரலிங்க நாடாரைச் சந்தித்து உண்ணா விரதத்தை கை விடுங்கள் என்று கேட்டுக் கொண்ட போது—இல்லை, தமி முக்காக, தமிழ் நாட்டிற்காக இந்த உயிர் போகட்டும் என்று சங்கரலிங்க நாடார் சொன்னார். அதன்படி அவர் மாண்டார் அவர் இறந்த பிறகாவது, தமிழ்நாடு என்று பெயர் வைக்கப் பட்டதா என்றால் இல்லை. சட்டமன்றத்திலேயே 'இனிமே லாவது தமிழ்நாடு என்று பெயர் வையுங்களேன்' என்று கேட் டேன். 'தமிழ் நாடு என்று இலக்கியத்திலே கிடையாது;என்று சொல்லிவிட்டார்கள். அதற்கு நான் 'சிலப்பதிகாரத்தில் இமிழ் கடல் வரப்பில் தமிழகம் என்றிருக்கின்றது, எனவே தமிழ்நாடு என்று இல்லை என்று சொல்லாதீர்கள்'' என்று

சொன்னேன். அதற்கு ஒரு அமைச்சர், ''சிலப்பதிகாரத்திலே இருக்கலாம், இலக்கியத்திலே இருக்கிறதா?'' என்றுகேட்டார் (பலத்த சிரிப்பு). இதெல்லாம் பழைய கதைகள். மீண்டும் நினைவூட்டிக் கொள்ள வேண்டிய கதைகள். அவர்கள் வந்தால் என்னென்ன கேட்பார்கள்; தப்பித் தவறி அந்த விபத்து ஏற்பட்டு விட்டால் என்னென்ன வெல்லாம் கேட்பார்கள் என்பதை நினைவு படுத்திக் கொள்ள வேண்டிய பழையகாலச் செய்திகள்.'' சென்னை ராஜ்யம்என்பதை மாற்றவேமுடியாது. ஏனென்றால் அமெரிக்காவிற்குச் சென்றால் ''மெட்ராஸ்'' என்றால்தான் புரிகிறது. தமிழ்நாடுஎன்றால் புரியாது,'' என் றெல்லாம் சொன்னார்கள். இன்றைக்கு குடியரசு தலைவராக இருக்கின்ற மதிப்பிற்குரிய ஆர். வி. அவர்களேகூட சட்ட மன்றத்திலே அன்றைக்கு அமைச்சராக இருந்து சொன்னார் கள். 'அமெரிக்காவிலோ, இங்கிலாந்திலோ சென்று மெட்ராஸ் ஸ்டேட் என்றால்தான் புரியும், தமிழ்நாடு என்றால் புரியாது, எனவே தமிழ்நாடு ஸ்டேட் என்று பெயர் வைக்க இயலாது'' என்று சொன்னார்கள். பிறகு அண்ணா அவர்கள்முதலமைச்சராக ஆன பிறகுதான், சென்னை ராஜ்யம் என்பதை மாற்ற முடியாது என்று சென்னவர்களுக்குப் பதிலாக—இந்த நாட்டுக்கு, இந்த நாட்டுக்கு உரிய பெயரை வைக்க வேண்டுமென்று போராடிய பெரியாரின் கொள்கையை வெற்றியடையச்செய்ய வேண்டும் என்பதற்காக அண்ணா அரசியல் ரீதியாக வென்ற காரணத்தால்—சென்னை ராஜ்யம் என்ற பெயரை தமிழ்நாடு என்று மாற்றி தீர்மானழ் கொண்டு வந்தார். தீர்மானம் கொண்டு வந்தது மாத்திரமல்ல, அண்ணாவே தமிழக சட்ட மன்றத்தில் மூன்று முறை சொன்னார். ''நான் தமிழ்நாடு என்பேன், நீங்கள் எல்லோரும் வாழ்க என்று சொல்ல வேண்டும்'' என்று; அவ்வாறு அண்ணா 'தமிழ் நாடு' என்றார். காங்கிரஸ் உறுப்பினர்கள் உட்பட எல்லோரும் வாழ்க, வாழ்க என்று ஒலித்தோம். அதற்குப் பிறகுதான் கர்நாடகமாநிலத்திலே தேவராஜ் அர்ஸ் தமிழ்நாட்டைப் பின் பற்றி—மைசூர் ராஜ்யம் என்று இருந்த பெயரை மாற்றி ''கர்நாடக மாநிலம்'' என்று அவர்களுடைய மொழியின் பெய

ரால் அந்த மாநிலத்திற்கு பெயர் சூட்டப்பட்டது. இவை களையெல்லாம் நான் குறிப்பிடுவதற்குக் காரணம்—தந்தை பெரியாரின் கொள்கைகள்— சமுதாயக் கருத்துகள்— இன்றைக்குக் கூட பெரியாரின் இயக்கத்தினர், ஒரு சாரார்— தேர்தலே கூடாது, தேர்தலில் நிற்பதே தவறு என்று கூட கூறிக் கொண்டிருக்கின்றார்கள். அது அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கின்ற முடிவு. அதில் நாம் குறுக்கிட முடியாது. அந்த முடிவும் அவர்களைப் பொறுத்தவரையில் சரி. அதே நேரத்தில் தேர்தலும் தேவை என்று நாம் எடுத்துக் கொண்டி ருக்கின்ற முடிவும் நம்மைப் பொறுத்தவரையில் சரி. தேர்த லுக்கு நின்று அண்ணா அவர்கள் முதலமைச்சராக ஆன காரணத்தினாலே தான் சுயமரியாதைத் திருமணம் சட்டப்படி செல்லுபடியாக்கப்பட்டது. பள்ளிகளில் இந்தி அகற்றப்பட்டு இருமொழித் திட்டம் வந்தது. சென்னை ராஜ்யம் என்ற பெயர் மாற்றப்பட்டு தமிழ்நாடு என்ற பெயர் வந்தது, அண்ணாவின் மறைவுக்குப் பிறகு தொடர்ந்து தந்தை பெரியாரின் கொள்கைகளை நிறைவேற்றுவதில் நாங்கள் எத்தகைய சமுதாய—சமதர்மப் பணிகளை ஆற்றிருக் கிறோம் என்பதெல்லாம் மிக நீண்ட பட்டியல். அவைகள் எல்லாம் உங்களுக்கு தெரியாதவைகள் அல்ல. நான் இங்கே அரசியல் பேச விரும்பவில்லை. ஆனாலும் சமுதாயத்தைப் பற்றி பேசுவது அரசியலாக இருந்தால் அது என் தவறு அல்ல. திருவள்ளுவரே கூட, அரசியல்வாதி அல்ல. ஆனால் அவர் யாத்த 1,330 குறட்பாக்களில் அரசியலுக்கு என்று தனி அதிகாரமே ஒதுக்கியிருக்கிறார். அரசியல்வாதி எப்படி இருக்க வேண்டும் எப்படி சட்டை போட்டிருக்க வேண்டும், என்றெல் லாம் எழுதவில்லை. ஐந்து லட்சம், பத்து லட்சம் என்று வாங்க வேண்டும் என்றெல்லாம் சொல்லவில்லை. அதைப் பாராளுமன்றத்திலே கொண்டுபோய்க் கொட்ட வேண்டு மென்றல்லாம் கூறவில்லை.

ஒரு அரசு எப்படியிருக்க வேண்டும் என்றெல்லாம் வள்ளுவர் அன்றைக்கே எழுதிக் காட்டிருக்கிறார். எனவே அரசியல் என்பது தீண்டத்தகாத ஒன்றல்ல. அரசியலை

அனைவரும் புரிந்து கொண்டாக வேண்டும். இளம் உள்ளங் களிலே அரசியலைப் பற்றிய சிந்தனைகள் மிகத் தெளிவாக நிச்சயமாக ஏறிட வேண்டும். அப்படி ஏறுகின்ற காரணத்தி னாலேதான் துரைமுருகன் இங்கே குறிப்பிட்டதைப் போல நந்தனம் கல்லூரியின் மாணவர்கள் எழுச்சி மிக்கவர்களாக— சிந்தனை ஆற்றல் பெற்றவர்களாக இருக்கிறார்கள். அது மாத்திரமல்ல. உங்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி சொல்வேன். உங்கள் கல்லூரியின் முதல்வர் அவர்கள் என்னிடம் எங்கள் கல்லூரி மாணவர்கள் எல்லாம் மிகவும் கெட்டிக்காரர்கள், 'திறமை வாய்ந்தவர்கள்' என்று பாராட்டிச் சொன்னார்கள். நீங்கள் எல்லாம் இதைக் கேட்டு ஆரவாரம் செய்யாமல் அமைதியாக இருப்பதைப் பார்த்தால்—ஒரு வேளை அவர் சொன்னது தவறோ என்னவோ எனக்குத் தெரிய வில்லை (சிரிப்பு). நான் நம்புகிறேன். நீங்கள் எல்லாம் கெட்டிக்காரர்கள், திறமைசாலிகள், ஆர்வம் படைத் தவர்கள், படிப்பிலே அக்கறை உள்ளவர்கள், அந்த அக்கறையைத் தொடர்ந்து கல்வித் துறையிலே செலுத்தி, தமிழகத்தினுடைய அரசியல் வித்தகர்களாக—சமுதாயச் சிற்பிகளாக—விஞ்ஞான மேதைகளாக—நீங்கள் ஒவ்வொரு வரும் வரவேண்டுமென்று இந்த ஆண்டு விழாவிலே வாழ்த்து கிறேன்.

தேசியம் என்றால் என்ன ?

தேசியம் என்றால் என்ன?

இன்று நடைபெறுகின்ற தென்னிந்திய வாணிப கல்வி அறநிலையக் கல்லூரியின் 22-வது ஆண்டுப் பெருநாள் விழாவிலே கலந்து கொண்டு உங்கள் அனைவரையும் சந்திப் பதிலே நான் மெத்த மகிழ்ச்சியடைகிறேன்.

மாணவர் அணியின் செயலாளர் தம்பி துரைமுருகன் பேசும்போது—தென்றல் மிதக்கின்ற இடம், கடற்காற்று ரம்மியமாக வீசுகின்ற இடம், மலையில் மோதி மந்தமாருதம் தவழுகின்ற இடம்—என்றெல்லாம் இந்த இடத்தைப் பற்றிக் குறிப்பிட்டார், ஆனால் எனக்கு மாலை அணிவித்த நேரத்தில் ஒரு மாணவர் ''பாலைவனத்தில் பயிலுகின்ற ரோஜாக்கள் நாங்கள்'' என்று குறிப்பிட்டார், பரவாயில்லை—பாலை வனத்திலேகூட தென்றல் தவழுகின்றது. கடற்காற்று வீசு கின்றது. மலையிலிருந்து மந்தமாருதம் கீதம் இசைக்கின்றது (கைதட்டல்). உண்மையிலேயே அவைகளினுடைய இனிமை யெல்லாம் இங்கே கிடைக்கின்றதோ இல்லையோ மாணவ கண்மணிகளாகிய உங்களுடைய முகங்களை யெல்லாம் பார்க்கும்போது அந்த இன்பம் எனக்குக் கிடைக்கிறது.

துரைமுருகன் பேசும்போது வரலாறுகளை—நிலநூல் குறிப்புகளை இன்றைய மாணவர்கள் தெரிந்து கொள்ள முடியாத அளவிற்கு ஒரு இருண்டநிலை உருவாக இருக் கின்றது என்பதை எடுத்துக்காட்டி அது குறித்து சில விளக்கங் களை இங்கே அளித்தார். அவர் உரையாற்றும்போதே ஒரு திருத்தத்தை நான் சொன்னேன். அவருடைய செல்வன் இன்று காலையிலே எழுதிவிட்டு வந்த தேர்வு குறித்து—என் இல்லத்திற்கு துரைமுருகனும், அவருடைய செல்வனும் வந்த

போது—நான் கேட்ட கேள்வி பற்றியும், அதற்கு அவருடைய செல்வன் அளித்த பதில் பற்றியும் அவரால் இங்கே விளக்கப் பட்டன.

"Facts" என்று அதிலே இருந்ததாக துரைமுருகன் சொன்னார். இல்லை அதிலே "Requirements" என்றுதான் இருக்கின்றது என்று நான் குறுக்கிட்டுச் சென்னவுடன் அவர் பேச்சை இங்கே திருத்திக் கொண்டார். இன்னொன்றை அவர் பேசும்போது நான் திருத்தவில்லை. தம்பி என்ற முறை யில் சிலவற்றை நான் உரிமையோடு குறிப்பிட்டுக் காட்டுவது அவர் திருத்திக் கொள்வதற்காக மாத்திரமல்ல. நீங்கள் எல்லாம் திருத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காகவும் கூட.

இந்தநாட்டினுடைய வரலாறு சரியாக எழுதப்படவில்லை என்பது நீண்டகாலமாக இருந்து வருகின்ற ஒரு குறைபாடு, அண்ணா அவர்கள் அண்ணாமலை பல்கலைக் கழகத்திலே ஒரு முறை உரையாற்றியபோது—நம்முடைய வரலாறு. அதிலும் குறிப்பாகவும் சிறப்பாகவும், இந்திய நாட்டின் வரலாறு காவேரிக் கரையிலேயிருந்து தொடங்கப்பட வேண்டு மேயல்லாமல், இப்போது தொடங்கப்படுவதைப் போல கங்கைக் கரையிலேயிருந்து தொடங்கப்படக் கூடாது என்று குறிப்பிட்டார்கள். அதற்கு ஆதாரமாக மனோன்மணீயம் எழுதிய சுந்தரம் பிள்ளை அவர்களே கூட பல எடுத்துக்காட்டு களை எடுத்து வைத்து காவேரிக் கரையிலேயிருந்து இந்தியா வின் வரலாறு எழுதப்படுவதுதான் சரியானதாகும், ஏனென் றால் இந்தப் பூபாகத்தினுடைய நாகரிகம், பண்பாடு, மொழி, இலக்கியம் அத்தனையும் இந்தியாவிலே தென்னகப்பகுதியிலே குறிப்பாக காவேரியிலே ஆரம்பமாக வேண்டும் என்று குறிப் பிட்டார். ஆனால் சுந்தரம் பிள்ளை குறிப்பிட்டதும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அதை ஆதாரமாக வைத்து அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய அந்தச்சொற்பொழிவின் கருத்துக் களும் இன்றளவும் இந்திய வரலாற்றுச் சான்றோர்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. நான்கூட துரை முருகன் பேசும்

போதுஇப்படிஏற்றுக்கொள்ளப்படாத மாறுபட்டகருத்துடைய அந்த வரலாறு இருந்தால் என்ன? இல்லாவிடால் என்ன? என்று எண்ணிக் கொண்டேன்.

ஆனால் வரலாற்றுகளை மாணவர்கள் தெளிவாக - குழப்பமின்றி உணர்ந்து கொள்ள வேண்டும். துரைமுருகன் பேசுகின்ற ஆர்வத்திலே 'இமயம் வரை சென்று காவா நாவிற் கனகனும் விஜயனும் உரைத்த சொற்களுக்காக இமயத்திலே கல்லெடுத்து அவர்களுடைய தலையிலே கல்லேற்றி வந்தான் நெடுஞ்சேரலாதன்' என்று சென்னார். அவன் பெயர் இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன். ஆனால் அவன் கூட அல்ல. அவனுடைய மகன் சேரன் செங்குட்டுவன் தான் குயிலாலுவம் வரை சென்றான், கனகவிஜயரை வென்றான், அவர்கள் தலையிலே கண்ணகி சிலைக்காக கல்லெடுத்து வந்தான். தம்பி பேசுகின்ற வேகத்தில், நீங்களெல்லாம் காட்டுகின்ற ஆர்வத்தில் நெடுஞ்சேரலாதனின் மகன் செங்குட்டுவன் என்று சொல்ல வந்த நேரத்தில் செங்குட்டுவனை மறந்து விட்டு நெடுஞ்சேரலாதனோடு நின்றுவிட்டார். அவருக்கு அது செங்குட்டுவன் என்பது தெரியாததல்ல. தெரிந்திருந்தும் கூட வேகத்திலே செங்குட்டுவன் என்று வரவில்லை. தந்தையோடு நின்றுவிட்டார், ஏனென்றால் இன்று அவருடைய பேச்சின் முக்கியத்துவமே மகன் — தந்தை இருவரைப்பற்றித்தானே (கைதட்டல்) இருந்தது. அதனால் மகனை மறந்துவிட்டு தந்தையின் சிறப்பினைச் சொன்னார். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும் இமயம் வரையிலே சென்றான். அதனால் அவனுக்கு இமயவரம்பன் என்றே கூட பெயர், அவனுடைய மக்கள்தான் செங்குட்டுவனும், இளங்கோவும். வரலாற்றை நினைவு படுத்திய காரணத்தால் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

இராமாயணம், மகாபாரதம் என்று இரண்டு பெரிய இதிகாசங்கள். அந்த இரண்டில்—ராமயணத்தை எழுதியவர் வால்மீகி, அவர் யார் என்றால், அவருடைய பூர்வீகம் என்ன வென்றால் முதலில் ரக்ஷன் என்ற ஒரு கொள்ளைக்காரன். கொள்ளை அடிப்பதையே தொழிலாகக் கொண்டவன். அந்த

ரக்க்ஷன் பிறகு ஆண்டவனின் அருள் பெற்று, வால்மீகியாக மாறி ராமயணம் எழுதினான் என்பது கதை !

அதைப் போலவே மகாபாரதம் எழுதியவர் வியாசர். அவரும்சாதாரண ஒருபின்தங்கிய சமுதாயத்திலே பிறந்தவர். ராஜ குடும்பத்திலே பிறந்தவரல்ல. அவர் மகாபாரதத்தை எழுதி உலகப் புகழைப் பெறக்கூடிய அளவிற்கு அந்த நூலைத் தந்தார்.

ஒன்றைநீங்கள்மறந்துவிடக்கூடாது. அவர்கள் இருவரும் சாதாரணக் குடும்பத்திலே பிறந்தவர்கள். இருவருமே ராஜ பரம்பரைக் கதைகளைத்தான் எழுதினார்கள். செங்குட்டுவன் தம்பி இளங்கோ ராஜ பரம்பரையிலே பிறந்தவன். செங்குட்டுவன் மூத்தவன், இளங்கோ இளையவன். ஒரு நாள் இமய வரம்பன் நெஞ்சேரலாதனின் கொலுமண்டபத்திற்கு ஒரு நிமித்திகன்—வருவதை முன் கூட்டி உரைப்பவன்—அவன் இருவரின் முகங்களையும் பார்த்துவிட்டு — செங்குட்டுவன் அண்ணன் என்றாலுங்கூட, தம்பியின் முகத்திலேதான் நாட்டை ஆளுவதற்கான குறிகள் தோன்றுகின்றன, எனவே இளங்கோதான் நாடாளுவான் என்று குறிப்பிட்டான்.

அந்த நேரத்தில் இளங்கோ எழுந்து, 'நிமித்திகரே! உம் முடைய வாக்குப் பொய்க்கும்!' என்றான். அதற்கு அவன் ''நிமித்திகன் சொன்னால் சொன்னதுதான், அது பொய்க் காது!'' என்று வாதிட்டான். அடுத்த கணமே, இளங்கோ துறவியாக மாறினான். துறவியாக மாறி நிமித்திகனுக்கு எடுத்துக் காட்டினான். ''உன்னுடைய வாக்கைப் பொய்க்க வைத்துவிட்டேன் பார். நான் துறவியாகி விட்டேன்!'' என்று சொல்லி குணவாயிற்கோட்டத்திலே அமர்ந்து சிலப்பதிகாரம் எழுதினான்.

நீங்கள்மறந்துவிடக்கூடாது. ராஜபாரம்பரியக்கதையான ராமாயணத்தை எழுதியவர் ஒரு கொள்ளைக்காரனாகஇருந்து பிறகு துறவியாகமாறிய வால்மீகி.ராஜபராம்பரைக்கதையான மகாபாரதத்தை எழுதியவர் ஒரு சாதாரண குடும்பத்திலே பிறந்த வியாசர். ஆனால் ராஜ குடும்பத்திலே பிறந்து-அந்த

ராஜ யோகம் தனக்கு தேவையில்லை என்றுஅதைத் துறந்து விட்ட இளங்கோ எழுதியது ராஜ பரம்பரைக் கதையல்ல; ஒரு சாதாரணக் குடும்பக் கதை. நடுத்தர மக்களின் கதை. மத்திய தர வர்க்கத்திலே உள்ள கதாநாயகன் கோவலன்தான் இளங்கோ வடிகளின் பாத்திரமாக வருகின்றவன். இதற்குப் பெயர்தான் 'நிலையும் நினைப்பும்' என்பதாகும்.

வால்மீகி — வியாசர் இருவரின் நினைப்பு ராஜாக்களின் கதையைஎழுதவேண்டுமென்றுசென்றது.எனவேராமாயணம்-பாரதம் பிறந்தது. ராஜ குடும்பதிலே பிறந்த இளங்கோ வடிகள் ஒரு நடுத்தரகுடும்பத்துக் கதையைஎழுதினார். நீங்கள் இன்றளவும் பார்த்தால் —சிலப்பதிகாரத்திலே எந்தக் கருத்து பையமாகஇழையோடிக்கொண்டிருக்கின்றதோஅதே கருத்துத் தான் இத்தனை ஆண்டுகளுக்குப்பிறகும்கூட புதிதாக படைக் கப்படுகின்ற நூல்களாக இருந்தாலும் - நாடகங்களாக இருந் தாலும்—திரை ஓவியங்களாக இருந்தாலும் — அந்த அடிப் படைக் கருத்து மாறுவதில்லை.

கணவன்—மனைவி — பிறகு குடும்பத்தை விடுத்து இன் னொரு பெண்ணோடுநட்பு—அதன்காரணமாக குடும்பத்திலே குழுறல் — அதன் காரணமாக ஏற்படுகின்ற பல்வேறு விளைவுகள்—இவைகள் பல கோணங்களிலே பல எழுத்தாளர் களால், இயக்குனர்களால், நாடக வித்தகர்களால் நாட்டிலே அரங்கேற்றப்பட்டாலும் கூட — இன்றளவும் சிலப்பதிகாரத் தின் அந்தக் கதையின் மையக் கருத்துத்தான் அவைகளில் இழையோடிக் கொண்டிருப்பதை நாம் காணுகின்றோம்.

ஏன் இவைகளைச் சொல்கிறேன் என்றால் —நம்முடைய வரலாறு நமக்கென்று சரித்திர ஆசிரியர்களால் காவேரிக் கரையிலிருந்து தொடங்கப் படாவிட்டாலுங்கூட —ராமா யணம் மகாபாரதம் இவைகளெல்லாம் சுட்டிக் காட்டாத வர. லாற்று பெருமையை சிலப்பதிகாரம் ஒருஇலக்கியமாகஇருந்து வரலாற்று சிறப்புகளைநமக்கு சொல்லிக்கொண்டிருக்கின்றது.

ஒரு குடும்ப கதை - கண்ணகி; கோவலன் ஆகிய இருவ ருடைய வாழ்க்கையிலே ஏற்பட்ட புயல்—கணிகையர் குலத்

திலே பிறந்த கற்புக்கரசியானமாதவி கோவலனிடம்கொண்ட காதல்—அதற்குப் பிறகுகோவலனுக்குஏற்பட்ட இன்னல்கள்-அதன் காரணமாக மதுரை மாநகருக்கு கோவலனும், கண்ணகியும் செல்ல வேண்டி ஏற்பட்ட நிர்பந்தம் -செல்கின்ற வழியிலே கவுந்தியடிகளைச் சந்தித்த நிகழ்ச்சி-அதன் பின்னர் மதுரையிலே சென்றுகண்ணகியை ஆய்ச்சியர்பகுதியிலே பாதுகாப்பாக வைத்து விட்டு சிலம்பு விற்கச்சென்ற அந்த சம்பவம் அங்கே அவனுக்கு ஏற்பட்ட துன்பம் பாண்டிய மன்னன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் அளித்த தவறான தீர்ப்பு—அந்த தீர்ப்பு சரியல்ல என்பதற்காக கண்ணகி வாதாடியது—பிறகு மதுரையை எரித்தது—அதன் பின்னர் கண்ணகியும் மறைந்தது—இந்தக் கண்ணகி கதையை சாத்தனார் மூலமாகக் கேட்டு இளங்கோவடிகளை எழுதச் செய்து-அந்தக்கண்ணகிக்குசிலையெடுக்க வேண்டுமென்றுஎண்ணிய நேரத்திலே வடபுலத்திலே கனகர், விஜயர் என்ற இரண்டு மன்னர்கள் தமிழ் மன்னர்களை இழித்துரைத்தார்கள் என்ற காரணத்திற்காக, இழித்துரைக்கப்பட்ட தமிழ் மன்னர்களில் சோழர், பாண்டியர் ஆகியோரெல்லாம் இருந்தாலுங்கூட, மூவேந்தர்களிலயாரைப்பழித்தாலும் நாங்கள் விடமாட்டோம் என்று உறுதிகொண்டு சேரமன்னனான செங்குட்டுவன் படை கொண்டு வடபுலம் வரையிலே சென்று—இமயத்திலே கல் எடுத்தது—வஞ்சி மூதூரிலே கண்ணகிக்கு சிலை வைத்தது—அப்படி சிலை வைத்து விழா நடத்திய போது இலங்கை மன்னன் கயவாகு அந்தவிழாவிற்கு வந்தது - நான் இவ்வளவும் சொல்வதற்குக் காரணம் சிலப்பதிகாரம் ஒரு இலக்கியம் மாத்திரமல்ல, சிலப்பதிகாரம்ஒருகுடும்பக்கதை மாத்திரமல்ல. சிலப்பதிகாரம் நம்முடைய உணர்வுகளிலேபதியக்கூடிய ஒரு ஒப்பற்ற காவியம் மாத்திரமல்ல, நமக்கு இருக்கின்ற மிச்சப் பட்டிருக்கின்ற வரலாறு ஒன்று உண்டு என்று சொன்னால், அது சிலப்பதிகாரத்திலேஇன்னறக்கு இருக்கின்றது என்பதை நீங்கள் யாரும் மறந்துவிட முடியாது.

சோழ நாட்டினுடைய மன்னன், அவன் ஆண்ட விதம், சோழ நாட்டு மக்களுடைய கலாச்சாரம், பண்பாடு இவைக

ளைப்பற்றி சிலப்பதிகாரம் பேசுகிறது. அதற்குப் பிறகு பாண்டிய நாட்டிற்குச்செல்கிறது.பாண்டிய நாட்டின் மன்னன் அவனுடைய வாழ்வு, அவனுடைய அரசநெறி இவைகளைப் பற்றியெல்லாம் கூறுகிறது. அதற்குப் பிறகு சேர நாட்டில் சென்று சிலப்பதிகாரக்கதை முடிகிறது. ஆகவே அன்றிருந்த மூன்று பேரும், நாடுகள் சேர நாடு, சோழநாடு, பாண்டிய நாடு இந்த மூன்று நாட்டின் சிறப்புகளையும் ஒரு நாட்டோடு இன்னொரு நாட்டை மோத விடாமல் எந்த நாட்டினுடைய சிறப்பையும் குறைக்காமல் எழுதப்பட்ட அற்புதமான வரலாற்றுக் காவியம் தான் சிலப்பதிகாரம்.

தம்பி துரைமுருகன் எடுத்துக் காட்டியதைப் போல நம் முடைய வரலாறுகளை மறைக்க வேண்டுமென்பதற்காக வரலாற்றுப் புத்தகங்களையே கல்லூரிகளுக்கோ கல்வி நிலையங்களுக்கோ தேவையில்லை என்று ஒழித்துக்கட்டி விடுவார்களானால், நம்முடைய சங்க இலக்கியங்கள் சொல்கின்ற வரலாற்றை மறைக்க, சிலப்பதிகாரம் போன்ற காவியங்கள் சொல்கின்ற வரலாற்றை மறைக்க யாராலும் முடியாது, அது என்றென்றும் நம்முடைய வாழ்வோடு ஒன்றிவிட்ட வரலாறு ஆகும் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் இதைக் கூறுகின்றேன்.

அப்படிப்பட்ட வரலாற்றுக்குரியநாம்அந்த வரலாற்றைச் சுட்டிக்காட்டினால், அந்த வரலாற்றுப் பெருமைமீண்டும்நமக் குத்தேவை என்பதை எடுத்துக்காட்டினால் சிலபேருக்கு சினம் பொங்குகிறது. அவர்கள் நாம் செங்குட்டுவனைப் பற்றிப் பேசினால், கரிகால் பெருவளத்தானைப் பற்றிப் பேசினால், ராஜ ராஜ சோழனைப் பற்றிப் பேசினால், ராஜேந்திர சோழனைப் பற்றிப் பேசினால்,— இப்படியெல்லாம் ஆளப் பட்டதரணி தமிழ்த் தரணி என்பதை எடுத்துக் காட்டி இங்கே எனக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில்எடுத்துச் சொன்னார்களே சிங்களத்தில் தமிழர்கள் சீரழிகிறார்கள் என்றுஅந்த சிங்களத் திலே சீரழிகின்ற தமிழர்களுக்காக குரலெழுப்பினால் நமக் கெல்லாம் தேசிய உணர்வு கிடையாது என்று சுருக்கமாக சில பேர் கூறி விடுகிறார்கள்.

எனக்கொரு சந்தேகம். இந்த தேசியம்என்பதற்கு யாருக் காவது, அதைப் பற்றி பெரிதாக பேசுகின்றவர்களுக்கு பொருள் தெரியுமா?தேசியம் என்று சொல்கிறார்களே அதற்கு என்ன பொருள்? தேசியம் எப்படி வந்தது? இயம் என்றால் என்ன? காந்தியடிகளுடைய பெயரைச் சொல்கின்றோம். அவ ருடைய கொள்கைகளைச் சொல்லும்போது சுருக்கமாககாந்தீ யம் என்கின்றோம். காந்தீயம் என்றால் கிராம ராஜ்யத்தை வலுப்படுத்துதல், தீண்டாமையை ஒழித்தல், நல்லபண்பாடு, ஒழுக்கம் இவைகளைப்போற்றுதல், மிக முக்கியமாக அகிம் சையை நிலை நாட்டுதல், காந்தியடிகளின் கொள்கைகளைச் சொல்லுகின்ற காரணத்தால் அது காந்தீயம் ஆகிறது.

இதைப்போலவே சில பேர் அண்ணா அவர்களின் கொள் கைக்கு மார்க்சிசம் என்பதைப்போல அண்ணாயிசம் என்று கூடச் சொன்னார்கள். அதற்கு என்ன விளக்கம் என்றுகேட்ட போது, கேபிடலிசம், சோஷலிசம், கம்யூனிசம் என்ற இந்த மூன்றும் சேர்ந்தது அண்ணாயிசம் என்றுகூடச் சொன்னார் கள். நான் அதைப்பற்றியெல்லாம் இப்போது விளக்க விரும்ப வில்லை. இவைகள் எல்லாம் இன்றைய வரலாறு.

நான் சொல்ல வருவது தேசியம் என்றால் என்ன? தேசம்+இயம், தேசியம்; காந்தி+இயம், காந்தீயம்;அதைப் போலத்தான் தேசம்+இயம்,தேசியம்; தேசத்தின்மீது கொண் டுள்ள பற்று, தேசத்திற்காக கொண்டுள்ள பற்றுக்கோடு— இதற்குப் பெயர்தான் தேசியம்: தேசம் என்பது வடமொழிச் சொல், அதற்கு சரியான தமிழ், நாடு! தேசம்+இயம் என்கிற போது, தேசியம் என்று சொல்ல முடிகின்றது. நாடு+இயம் என்று சொல்கின்றபோதுசேர்த்துச் சொன்னால் சொல்வதற்கு கஷ்டம். நாட்டியம் என்று தான் சொல்லவேண்டும். அதற்குப் பொருள் வேறாகிவிடும். நாடியம் என்றாலோ அது ஒரு ஊரை மட்டுமே குறிக்கும். அது சரியான பொருளையும் தராது. நாட்டியம் என்று சொன்னால் குழப்பம் ஏற்படும். நாங்களும் நாட்டிய பக்தர்கள் என்று சொன்னால், ஓகோ நல்ல நடனங் களைப் பார்ப்பார்கள் போலும் என்று எண்ணிக்கொள்வார்கள் நாங்களும்தேசியவாதிகள்என்றுசொல்லும்போதுஎளிமையாக

இருக்கின்றது. அதைப்போல நாங்களும் நாட்டிய வாதிகள் என்று சொல்ல முடியாது.

நாம் தேசியவாதிகள் என்பதற்கு சரியான மொழி பெயர்ப்பு—நாம் நாட்டுப் பற்றாளர்கள். நமக்கும் நாட்டுப் பற்று உண்டு, ஆக தேசியம் என்ற ஒருவடமொழிச் சொல்லை சிலர் பயன்படுத்துகின்ற காரணத்தாலேயோ— அந்தச் சொல்லை நாம் பயன்படுத்தாத காரணத்தாலேயோ நாம் நாட்டுப் பற்று அற்றவர்களாக ஆகிவிட முடியுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

தமிழனுக்காக குரல் கொடுப்பது நாட்டுப் பற்றுக்கு விரோதமா? அல்ல! இந்தத் தமிழ் மொழி பேசுகின்ற பகுதியையே கவிச்சக்ரவர்த்தி பாரதியார் ''செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே'' என்று சொன்னார். அதனால் அவர் இந்திய நாட்டிற்கு எதிரி என்று பொருள் அல்ல. நான் பிறந்த மண்ணைப் போற்றுவது, என்னுடைய தாய் மொழியாம் தமிழ் மொழியைப் போற்றுவது, நாட்டுப் பற்றுக்கு விரோதமாக ஆகிவிட முடியாது. நாட்டுப்பற்று எங்களுக்கெல்லாம் இருக்கின்ற காரணத்தால்தான் தொடர்ந்து இருந்து வருகின்ற காரணந்தான்—இனியும் இருக்கப் போகின்ற காரணத்தால்தான் நாங்கள் விலைவாசி உயர்வுக்காக எதிர்ப்புக் காட்டி போராடி அதன் காரணமாக சிறையில் அடைக்கப்பட்டிருந்த காலக் கட்டத்தில், அண்ணா அவர்களும் நாங்களும் ஏறத்தாழ இருபதாயிரம் பேர் பல்வேறு சிறைச்சாலைகளிலே பூட்டப் பட்டிருந்த போது சீன ஆக்கிரமிப்பை இந்திய தலைமை அமைச்சராக இருந்த பண்டித ஜவகர்லால் நேரு எதிர்த்து முழங்கிய நேரத்திலே சிறைச்சாலையிலே இருந்த திராவிட முன்னேற்றக் கழகம் நேருவின் கரங்களைப் பலப்படுத்துவோம் என்று சொன்னது. நாட்டிற்கு ஆபத்து என்கிற போது நாங்கள் எங்களுடைய பல்வேறு பிரச்சினைகளை எல்லாம் மறந்து விட்டு, வேறுபாடுகளையெல்லாம் மறந்து விட்டு, ஒரே நாடு என்ற அந்த முழக்கத்தைச் செய்வோம் என்று அண்ணா குறிப்பிட்டார். அவர் வழியில் நாங்கள்

அத்தனை பேரும் குரல் எழுப்பினோம். நாங்கள் நாட்டுப்பற்று அற்றவர்கள் என்று யாராவது இதற்குப் பிறகும் சொல்வார் களேயானால் அவர்களுடைய இருதய சுத்தத்தைத்தான் நான் சந்தேகிக்க வேண்டியவனாக இருக்கின்றேன்.

அதைப் போலவே பங்களாதேஷ் போராட்டம் நடை பெற்றபோது, நான் அமெரிக்க அரசின் அழைப்பின் பேரிலும், அந்த அழைப்பைப் பயன்படுத்திக்கொண்டு ஒரு சிறு சிகிச்சை செய்து கொள்ள வேண்டிய நிலையிலும் அமெரிக்காவில் இருந்தேன். பங்களாதேஷ் படையெடுப்பு என்று செய்தி வந்தவுடன் சுற்றுப்பயணத்தை இடையிலேயே ரத்து செய்து விட்டு இந்தியாவிற்கு, வந்தேன். தமிழகத்தி லுள்ள எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களையும் அழைத்து ராஜாஜி மண்டபத்திலே அனைத்துக் கட்சிக் கூட்டத்தை நடத்தினேன். ஒரு வார காலத்திற்குள்ளாக ஆறு கோடி ரூபாயை யுத்த நிதியாக வசூலித்து பிரதமர் இந்திரா காந்தியை அழைத்து அவருடைய கரங்களிலே ஒப்படைத் தேன். அப்போது சொன்னேன். ''இந்திரா காந்தி அம்மை யார் அவர்களே! இந்தியாவில் பெரிய மாநிலம் நீங்கள் பிறந்த மாநிலமான உத்திரப்பிரதேசம். தமிழ் நாட்டைவிட இரண்டு மடங்கு பெரிய மாநிலம். அங்கே தரப்பட்டிருக்கின்ற யுத்த நிதி நான்கு கோடி. நாங்கள் தமிழ்நாட்டின் சார்பாக தருவது ஆறு கோடி—பெற்றுக் கொள்ளுங்கள்'' என்று சொன்னேன். அப்போது இந்திராகாந்தி ''கருணாநிதி இப்படிச் சொன்னார், என்ன இருந்தாலும் உத்திரப்பிரதேசம் பின்தங்கிய மாநிலம்'' என்று தன்னுடைய மாநிலத்திற்காக வேடிக்கையாக—ஆனால் உற்சாகமாக அந்த நிதியைப் பெற்றுக்கொண்டு பேசினார்கள்.

எனவே நாம் நாட்டுப் பற்று அற்றவர்கள்-ஒருமைப் பாட்டுக்குப் பகைவர்கள் என்று சொல்லுகின்றவர்கள் நாத் தழும்பு ஏறியவர்களாக இருக்கவேண்டும், அல்லது நாணய மற்றவர்களாக—உண்மையை மறைக்கின்ற உன்மத்தர் களாக—இருக்க வேண்டும்.

நமக்கா நாட்டுப் பற்று இல்லை? இந்தியாவிலே இருக்கின்ற ஒரு பகுதி மக்களுக்கு நாட்டுப் பற்று இல்லை என்று யாராவது சொல்வார்களேயானால், அவர்கள் இந்தியாவை, இந்திய மக்களை மற்ற நாட்டுக்காரனுக்குக் காட்டிக் கொடுக்கிறார்கள் என்று அர்த்தம். இந்தியாவிலே உள்ள மக்களை நாட்டுப் பற்றற்றவர்கள் என்று சொன்னால், அது எதிரிக்கு இளக்காரமாக ஆகிவிடாதா? எதிரி களிப்படைய மாட்டானா? ''பரவாயில்லை, இந்தியாவிலேயே நாட்டுப்பற்று அற்றவர்கள் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள், நாம் படை யெடுத்துச் சென்றால் சுலபமாக இந்தியாவை வென்றுவிட முடியும்'' என்று எதிரி எண்ணமாட்டானா? இந்தியாவிலேயே இந்திய நாட்டுப்பற்று இல்லாதவர்கள் இருக்கிறார்கள் என்று சொல்வதைவிட பலகீனமான வாதம் ஏதாவது இருக்க முடியுமா?

தமிழ் வாழ்க என்று செல்வது எப்படி நாட்டுப் பற்றுக்கு விரோதம்? என்னுடைய இனம் உரிமை பெற வேண்டுமென்று சொல்வது எப்படி நாட்டுப் பற்றுக்கு விரோதம்? இந்தியாவி விலே பல தேசிய இனங்கள் கிடையாதா? இந்தியாவிலே பல தேசிய இனங்கள் உண்டு என்று நேரு அவர்களே ''இந்திரா அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் கொண்ட புத்தகத்தில் குறிப்பிடவில்லையா? இந்தியாஒருநாடு என்றாலுங்கூட, அது ஒரு பெரிய கண்டம், அதில் பல தேசிய இனங்கள் இருக்கின் றன. ஆகவே வேற்றுமையிலேதான் ஒற்றுமை காண முடியும் என்ற இந்த வாக்கியங்களை நேரு எழுதியது கிடையாதா? ஆக இந்தியா என்கின்ற இந்த பூபாகத்தில் பல்வேறு மொழி களைப் பேசுகின்ற பல்வேறு தேசிய இனங்கள் இருக்கின்றன. அதற்காக இந்திய ஒருமைப்பாடு என்ற பெயரால் தேசிய இனங்களையெல்லாம் அழித்து விட முடியாது. 1969 ஆம் ஆண்டு வாக்கில் ஐரோப்பிய நாடுகளுக்கு நான் சுற்றுப் பயணம் மேற் கொண்டிருந்த போது லண்டன் மாநகர்த்திலே ஒரு பெரிய அளவிலான நிருபர்கள் கூட்டம். சராமாரியான கேள்விகளைக் கேட்டார்கள். ''உங்களுக்கு இந்திய ஒருமைப் பாட்டில் எந்த அளவிற்கு நம்பிக்கை? நீங்கள் மாநில சுயாட்சி மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்ப

பதும், தனித்தனிதேசிய இனங்கள் இருப்பதாகச் சொல்வதும், எந்தப் பொருளில்?'' என்று கேட்டார்கள்.

நான் அப்போது அவர்களைப் பார்த்துச் சொன்னேன். நிருபர்கள் கூட்டம் நடைபெற்ற மண்டபத்தில் ஒரு பெரிய ஓவியம் இருந்தது. ஒரு அருவியின் ஓவியம். வெள்ளி போல் வண்ணம் படைத்த அருவி துள்ளித் துள்ளி விழுந்து ஓடுகின்ற காட்சியும், அந்த அருவியோரத்தில் உள்ள மலைச்சாரலில் பச்சைக் கிளைகளோடும், இலைகளோடும் கூடிய மரங்கள் அடர்ந்திருக்கின்ற காட்சியும், அந்த மரங்களைத் தொடர்ந்து பச்சை, நீலம், ஊதா, சிகப்பு, மஞ்சள் என்பன போன்ற, பல்வேறு வண்ணங்கள் கொண்ட மலர்கள் இருக்கின்ற காட்சியும் கொண்ட படம் அது. நான் அவர்களைப் பார்த்து ''இந்தப் படத்தைத் தயவு செய்து பாருங்கள், இது ஒரு படம் என்பதை ஒத்துக்கொள்கிறீர்களா?'' என்று கேட்டேன். ''ஆமாம்'' என்றார்கள். ''இது இயற்கைக் காட்சியை சித்திரிக்கின்ற படம் என்பதை ஒத்துக் கொள்கிறீர்களா'' என்றேன். அதற்கும் ஆமாம் என்றார்கள். உடனே நான், இது இயற்கைக் காட்சியைச் சித்திரிக்கின்ற படம். ஆனாலும் இதிலே பல வண்ணங்கள் இருக்கின்றன. அருவி வெள்ளை வண்ணம், மலை பழுப்பு வண்ணம்; மரம், கிளை இலை, தழை இவைகள் எல்லாம் பச்சை வண்ணம்; பூத்துக் குலுங்குகின்ற மலர்கள் எல்லாம் பல்வேறு வண்ணம். இவைகள் அத்தனையும் சேர்ந்து தான் ஒரு ஓவியம். இயற்கைக் காட்சி; இதைப் போலத்தான் இந்தியா என்பது ஒருமைப்பாடு என்ற ஒரே ஓவியம் என்றாலுங்கூட, அதிலே தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி, இந்துஸ்தானி, என்பன போன்ற பல மொழிக்குரிய மக்கள் வாழ்கிறார்கள். பல தேசிய இனங்கள் இருக்கின்றன. இல்லை, ஒருமைப்பாடு என்ற பெயரால் எல்லாம் ஒன்றாகத்தான் இருக்க வேண்டுமென்றால் ஒரு தூரிகையை எடுத்து— பச்சை, சிகப்பு, நீலம், ஊதா, வெள்ளை எல்லாவற்றையும் ஒரே வண்ணமாக குழப்பினால், படம் அழகாக இருக்காது. வண்ணமும் என்ன வென்று புரியாது, குழப்பம்தான் தெரியும், அங்கே குளிர்ந்த இயற்கைக் காட்சியைக்காண முடியாது.

குளிர்ந்த அருவியையும் இயற்கை வனப்பையும் காண வேண்டுமேயானால் பல வண்ணங்கள் அடங்கிய—பல வண்ணங்களுக்கேற்ற உருவங்கள் அடங்கிய ஒரு படம் எப்படி தேவையோ அதைப் போலத் தான் பல தேசிய இனங்களும் அந்தத் தேசிய இனங்களுக்குரிய மொழிகளும், அந்த மொழி களுக்குரிய உரிமைகளும் பெற்ற ஒரு நாடாகத்தான் இந்தியா இருக்க வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோமேயல்லாமல், எல்லாவற்றையும் சேர்த்துக் குழப்பி, ஒன்றாக தூரிகையாலே ஒரு படத்தை காட்டுகின்ற அந்த வேலையை நாங்கள் ஏற்றுக் கொள்ள இயலாது, அது சிறந்த ஓவியன் செய்கின்ற வேலை யாக இருக்க முடியாது" என்று நிருபர்களிடம் லண்டனிலே குறிப்பிட்டேன்.

ஒருமுறை சென்னையிலே நடைபெற்ற ஒரு கூட்டத்திலே எனக்கு முன்னால் பேசிய ஒரு நண்பர்—அவர் தன்னை தேசிய வாதி என்று சொல்லிக் கொள்பவர்—நான் முதலிலே சொன் னேனே, தேசியவாதி—நாட்டுப்பற்றாளன், நாட்டுப் பற்றா ளன் என்பது தெளிந்த தமிழ் மொழி. தேசிய வாதி என்பது தமிழ் அல்லாத வேறு மொழி. தமிழைப் போல் இன்றைக்கு ஒலிக்கத் தொடங்கிவிட்ட மொழி. அந்த தேசியவாதியான நண்பர் சொன்னார்.

"கலைஞர் கருணாநிதி அவர்கள் தன்னுடைய அரசியல் எண்ணங்களை தமிழகத்தோடு நிறுத்திக் கொள்ளாமல் அகில இந்திய அளவிலே பரப்பவேண்டும். அகில இந்தியத் தலை வர்களில் ஒருவராக அவர் வர வேண்டும். அதற்கான ஆற்றல் அவருக்கு உண்டு. அதற்கு அவர் முயற்சிக்க வேண்டும்" என்று சொன்னார். நான் பேசும்போது பூமியிலே இருக்கின்ற ஒருவன் ஆகாயத்திற்குப் போய்த்தான் ஆகாயத் தைப்பார்க்க வேண்டுமென்று இல்லை. பூமியிலே நின்று கொண்டே ஆகாயத்தைப் பார்க்க முடியும். அதைப் போல நான் தமிழ் நாட்டிலேயே நின்று கொண்டே, அகில இந்தியா

எனும் வானத்தைப் பார்க்கிறேன் என்று சொன்னேன், தமிழ் நாடு என்ற பூமி இருத்தால்தான் அந்த வானத்தை பார்க்க முடியும். வானம் இருக்கலாம். பூமி இல்லாவிட்டால் ஆளே இருக்கமுடியாது. எனவேதான் தமிழ்நாடு, தமிழ் இனம், தமிழ் மொழி, தமிழ் உணர்வு என்கிற இந்த நிலையிலே இருந்து நான் நாட்டுப்பற்று என்கிற வானத்தைக் காண விரும்புகிறேன். நாட்டுப்பற்று என்பது வானம். என்னுடைய மொழி, என்னுடைய இனம், என்னுடைய உரிமை இவைகள் எல்லாம் பூமியைப்போன்றது. எனவே என்னுடைய நாடு என்கிற இந்தியாவிற்குள் தமிழ்ப்பகுதி என்ற இந்த நாடும் ஒரு பகுதி தான் நான் இல்லை என்று மறுக்கவில்லை. என்ன தான் பரந்த. பெருந்தன்மையோடு விளக்கங்களைச் சொன்னாலும் கூட, அவரவர்களுடைய மண்ணுக்குரிய அந்த ஆசைகள் யாரையும் விட்டுப் போய்விடுவதில்லை.

உங்களுக்குத் தெரியும். இந்திரா காந்தி அவர்கள் கூட ஒருமுறை மாஸ்கோ சென்றிருந்த போது, அங்கே சங்க இலக்கியங்களிலிருந்து ஒரு பாடலில் இரண்டு சொற்றொடரை அழகாகச் சொன்னார்கள். 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்'' என்று இந்தியாவில் தமிழ்நாட்டுப் புலவர் ஒருவர் சங்க காலத்தில் பாடியிருக்கிறார் என்று சொன்னார்கள்.

அந்தப் பாடலைப் பாடியவர் கணியன் பூங்குன்றனார். யாதும் ஊரே, யாவரும் கேளிர் என்றால் எல்லா ஊரும் நம்முடைய ஊர்தான். இந்த உலகம் முழுவதும் நம்முடைய ஊர் யாவரும் கேளிர்—சில பேர் கேளிர் என்பதை கேளீர் என்று எண்ணிக் கொண்டு கேளுங்கள் என்று கூறுவார்கள். அது தவறு, கேளிர் என்றால் சுற்றத்தார். யாவரும் கேளிர் என்றால் எல்லோரும் நம்முடைய சுற்றத்தார். உலகம் முழுவதும நம்முடைய ஊர் என்று கணியன் பூங்குன்றனார் பாடிய டாடலை இந்திரா காந்தி அம்மையார் மாஸ்கோவில் சொன்னார்கள். இன்றைகுக்கூட அதைச் சிலர் எடுத்துச் சொல்லி, டார், பார் சங்கக் காலத்திலேயே கணியன் பூங்குன்றனாருக்கு எவ்வளவு பரந்த உள்ளம் இருந்திருக்கின்றது. ஆனால் கருணாநிதிக்கும், மற்றவர்களுகுகும் அந்தப் பரந்த உள்ளம் இல்லையே ? என்றெல்லாம் சொல்லக் கூடும். நான் அவர்

களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புவது—யாதும் ஊரே, யாவரும் கேளிர் என்று பாடிய அந்த கணியன் பூங்குன்றனாரின் பெயர் கணியன். பூங்குன்றம் என்பது அவருடைய பிறந்த ஊர், அதனாலேயே தன்னுடைய ஊர்ப் பெயரை விட முடியாமல் கணியன் பூங்குன்றனார் என்று வைத்துக் கொண்டார். ஆக பிறந்த மண்ணை அந்தப் புலவனும் கூட துறக்க விரும்பவில்லை, அந்தப் பெருமையை இழக்கவும் விரும்பவில்லை.

—என்னைப் பார்த்து நான் வெளி நாட்டுக்குச் சென்றிருக்கின்ற நேரத்தில் யார் என்று கேட்டால் இந்தியன் என்று சொல்வேன். ''இந்தியாவில் நீ யார்? என்று கேட்டால், தமிழன் என்று சொல்வேன். தமிழ் நாட்டிலே என்னைப் பார்த்து யார் என்று கேட்டால் தஞ்சை மாவட்டம் என்பேன். தஞ்சை மாவட்டத்தில் என்னைப் பார்த்து எந்த வட்டம் என்று கேட்டால நாகை வட்டம் என்பேன். அங்கே என்னைப் பார்த்து பிறந்தது எந்த ஊர் என்று கேட்டால் திருக்குவளை என்பேன்.

திருக்குவளை என்று சொல்லுகின்ற காரணத்தால்—நான் நாகை வட்டத்திற்கு விரோதியல்ல. நாகை வட்டத்தைச் சேர்ந்தவன் என்று சொல்வதால் தஞ்சை மாவட்டத்திற்கு விரோதியல்ல. நான் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்பதால், தமிழ் நாட்டிற்கு விரோதியல்ல. நான் தமிழ் நாட்டுக்காரன் என்று சொல்வதால், இந்தியாவிற்கு விரோதியல்ல, அதை அறிவு உள்ளவர்கள் புரிந்து கொள்ள முடியும்.

இந்தியாவும் பாகிஸ்தானும் கிரிக்கெட்டிலே மோதினால் இந்தியா வெற்றி பெற வேண்டுமென்று எண்ணுகிறோமே; அது, நாட்டுப்பற்று! இந்தியாவிற்குள் கர்நாடக மாநிலமும், தமிழ் மாநிலமும் கிரிக்கெட்டில் மோதினால் தமிழ் நாடு அணி வெற்றி பெற வேண்டுமென்று எண்ணுகிறோம். அதனால் நாம் இந்தியாவிற்கு விரோதிகளா? ஆக அங்கங்கே உள்ள வட்டார உணர்வுகள்—மாநில உணர்வுகள் இவைகள் நாட்டுப்பற்றுக்கு விரோதம் அல்ல. இதைப் புரிந்து கொள்ளாதவர்கள்தான் நம்மை தேசியத்திற்கு பகைவர்கள் என்று சொல்கிறார்கள். தேசியம் என்பதற்கு உணமையான பொருள் எங்களுக்கு தெரியும் நாட்டுப்பற்று என்கிற அந்த பொருள் எங்

பேராசிரியர் அன்பழகன் நூல் அரசுடைமை ஆக்கப்பட்டது

களுக்கு நன்றாகத் தெரியும். அந்த நாட்டுப்பற்று எங்களுக்கு இருந்த காரணத்தால் தான் இருக்கின்ற காரணத்தால்தான் —என்றைக்கும் எப்போதும் இருக்கும் என்ற காரணத்தால் தான் அண்ணா சீன ஆக்கிரமிப்பின் போது சொன்னார்; "வீடு இருந்தால் தான் ஓடு மாற்றிக் கொள்ள முடியும், நாடு இருந்தால் தான் நாம் பல பிரச்சினைகளை பற்றி ஜனநாயக ரீதிபில் விவாதிக்க முடியும். எனவே வீடு எப்படி நமக்கு முக்கியமோ அதைப்போல நாடு நமக்கு முக்கியம், எனவே நம்முடைய பிரச்சினைகளையெல்லாம் மறந்துவிட்டு ஒன்றாக இந்தியாவைக் காக்க முனையுங்கள்" என்று அண்ணா சொன்னார்.

அதிலிருந்து எள்ளளவும் நாங்கள் என்றைக்கும் மாறியவர்கள் அல்ல. ஆனால் எங்கள் இனம் பாதிக்கப்படும்போது, இலங்கையிலே, அழிக்கப்படும் போது, அதை இங்கேயுள்ள இந்திய ராணுவமே சென்று ராஜீவ்காந்தியின் ஆணைக்கு உட்பட்டு அந்தக்காரியத்தைச்செய்யும்போது அங்கே அழிவது இனம் மாத்திரமல்ல, இந்தியச் சிப்பாய்களும் அழிகிறார்கள். இதுவரையில் ஐயாயிரம்அப்பாவித்தமிழர்கள் இந்தஆறுமாத காலத்தில் இந்தியப்படையால்கொல்லப்பட்டிருக்கின்றார்கள். ஆயிரம் விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். அதைப்போலவே ஆயிரத்திற்கு மேற்பட்ட இந்திய வீரர்களும் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். இவைகள் எல்லாம் தேவைதானா? என்று எண்ணிப் பாருங்கள் என்று சொன்னால், அது இந்தியாவிற்கு விரோதமான கருத்து அல்ல.

இந்தியாவிலே ஒரு ராணுவம் எப்படி நடந்து கொள்ள வேண்டும், அது இந்தியாவிற்கு விரோதமான காரியங்களைச் செய்யக் கூடாது என்று சொல்ல இந்தியக் குடிமகன் ஒவ்வொருவனுக்கும் உரிமை உண்டு. மொழியால் நான் தமிழன், இனத்தால் திராவிடன், நாட்டால் இந்தியன், உலகத்தால் மனிதன் இதுதான் என்னுடைய உணர்வு. அந்த உணர்வை இளம் உள்ளங்கள் பெற வேண்டும் என்று கூறி அமைகிறேன்.

(சென்னை எஸ். ஐ. வி. ஈ.டி. கல்லூரியில் 30-3-88 அன்று கலைஞர் ஆற்றிய உரை)



திருமகள் நிலையம்